பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 02, வெள்ளிக்கிழமை 18.08.2017 | கதிர் 285


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# இந்தியப் புலனாய்வுப் பிரிவின் ஆலோசனையை மஹிந்த ஏற்காதமையால்தான் ஜெனீவா நெருக்கடி!



## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தகவல்



கொழும்பு, ஓக.18

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில், இலங்கைக்கு எதிராகப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படுவதற்கு முன்னர், இந்திய புலனாய்வுப் பிரிவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் யோசனை ஒன்றை முன்வைத்ததுஎனவும், அதனை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்திருக்கலாம் என்றும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளாதமை பக்கம் 18

# வவுனியா வளாகம் விரைவில் வன்னிப் பல்கலைக்கழகமாகும்!

## உயர் கல்வி அமைச்சர் அங்கு அறிவிப்பு




வவுனியா, ஒகஸ்ட் 18

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், வன்னிப் பல்கலைக்கழகம் என்று பெயரிடப்பட்டு தனியான பல்கலைக்கழகமாக விரைவில் உருவாக்கப்படும் என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அங்கு வைத்துத் தெரிவித்தார். பக்கம் 18

# கேப்பாபிலவு போராட்ட மக்கள் கொழும்பு நோக்கி நடைபயணம்

## வற்றாப்பளை ஆலயத்தில் இருந்து இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக. 18

கேப்பாபிலவு இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களின் நிலங்களை விடுவிக்கக் கோரி கடந்த 170 நாள்களாகப் போராட்டம் நடத்தி வரும் மக்கள் சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து அங்கிருந்து கொழும்பை நோக்கி இன்று நடைபயணம் ஒன்றை ஆரம்பிக்கின்றனர்.

தமது போராட்டத்தில் 171ஆவது நாளான இன்று வற்றாப்பளை கண்ணகை ஆலயத்தில் இருந்து இந்த நடை பயணப் போராட்டம் ஆரம்பமாகின்றது.

பௌத்த தேரர்கள் மற்றும் இந்து, பக்கம் 18

# மத்தள விமான நிலையம் குறித்து இன்று இந்தியத் தரப்புடன் பேச்சு

கொழும்பு, ஓக.18

மத்தள விமான நிலையத்தை இலங்கை – இந்தியக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் இரு தரப்பு ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று பக்கம் 18



## அவைத் தலைவரின் தயவால் பதவியைத் தக்க வைத்துக்கொண்டு

# தன்னை விளம்பரப்படுத்துவதற்காக தவராசா பத்திரிகைகளிடம் தஞ்சம் புகுந்துள்ளாராம்!

## எதிர்க்கட்சித் தலைவர் மீது முதல்வர் விக்கி பாய்ச்சல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஓக. 18

தன்னை விளம்பரப்படுத்துவதற்காக மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா பத்திரிகைகளுக்குப் பின்னால் போய் தஞ்சம் புகுந்துள்ளார் என்று அவரைக் கடுமையாக நேற்றுச் சாடினார் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய சிறப்பு அமர்விலே உரையாற்றுகையிலேயே முதல்வர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முதல்வரின் இந்தக் கருத்தினால் நேற்றைய மாகாண சபை ஆரம்பத்திலேயே பக்கம் 18

# தியாகி திலீபனுக்கு நல்லூர் வீதியில் நினைவுத் தூபி அமைக்க வேண்டும்

## வடமாகாண அவைத் தலைவர் உணர்வுபூர்வ கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஓக. 18

நல்லூர் பின் வீதியில் அமைக்கப்பட்டு, தற்போது சிதைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியை அதே இடத்தில் மீள அமைத்து அந்த இடத்தை எல்லைப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண அவைத்தலைவர் பக்கம் 18

# யாழ்.மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க இரு எம்.பிக்கள் தடையாக உள்ளனர்

## மாகாண சபையில் சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஓக. 18

யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் பிரச்சினை பெரும் பூதாகரமடைந்திருக்கும் நிலையில், யாழ். மக்களுக்கு இரணைமடுவில் இருந்து நீர்கொண்டு வருவதற்கும் மருதங்கேணியில் இருந்து நீர் கொண்டுவருவதற்கும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தடையாக பக்கம் 18

# 3 பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக மருத்துவ பீடங்கள்

கொழும்பு,ஓக.18

வயம்ப, சப்ரகமுவ, மொரட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக 3 மருத்துவ பீடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் பக்கம் 18

# பதவி விலக்கிய அமைச்சர்களை மீள நியமிக்குமாறு வற்புறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையில் முன்னர் இருந்த அதே அமைச்சர்களை மீளவும் அமைச்சர்களாக நியமிக்கு பக்கம் 18

# பொலிஸுக்கு வாள்வெட்டு வீழ்ந்த பின்பே விரைந்து நடவடிக்கை என்கிறார் சுகிர்தன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக் குழுக்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு அச்சத்துடன் வாழ்ந்த போது நடவடிக்கை எடுக்காமல் அமைதியாக இருந்த பக்கம் 18

### சீறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

# வினைத்திறனின்மை பற்றிய குற்றச்சாட்டுக்கு நேரடியாகப் பதில் தராமல் முதல்வர் மழுப்பல்

## வட்டுக்கோட்டைக்குப் பாதை கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு எனப் பதில்



யாழ்ப்பாணம், ஓக. 18

''வட்டுக்கோட்டைக்குப் பாதை கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்று கூறுவது போன்றே'' முதலமைச்சரின் பதில் அமைந்துள்ளது.

இன்றைய 102 ஆவது அமர்வில் முதலமைச்சர் நீண்ட உரையை ஆற்றிய போதும் நான் வினைத்திறன் அற்றவை எனச் சுட்டிய விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

அத்துடன், இது மறைமுகமாக முதலமைச்சர் தமது வினைத்திறனற்ற செயற்பாடுகள் தொடர்பான எனது குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்கிறார் என்பதைத் தெளிவாக்குகிறது என்றும் தவராசா கூறியுள்ளார்.

வடமாகாண சபையின் 102 ஆவது அமர்வு நேற்றுக் காலை சபா மண்டபத்தில் நடந்தபோது, 101 ஆவது அமர்வில் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு நேற்றைய அமர்வில் முதலமைச்சர் பதிலளித்துள்ளார்.

இதன்போது, முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும், எதிர்க்கட்சித்தலைவர் தவராசாவுக்கும்இடையில்கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட்டுக்கோட்டைக்குப் போகும் வழி எதுவென்றால், ''துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு'' என்பது போல் அமைந்துள்ளது முதலமைச்சரின் இன்றைய (நேற்று) வடமாகாண சபை அமர்வின் போதான உரை.

கடந்த 21.07.2017 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் வட மாகாண சபை 3 வருடங்கள் 9 மாதங்களில் சாதித்தவை என்ன என்ற மீளாய்வு வாதத்தை ஆரம்பித்து வைத்து, வட மாகாண சபையின் செயல் திறனற்ற செயற்பாடுகள் தொடர்பாக ஆதாரங்களுடன் எடுத்தியம்பினேன்.

இது தொடர்பாக இன்று (நேற்று) முதலமைச்சரால் அவையில் கூறப்பட்ட பதில்கள், என்னால் முன்வைக்கப்பட்ட வினைத்திறனற்ற செயற்பாடுகளைத் திசை திருப்பும் வகையில் அமைந்திருக்கின்றனவே அன்றி, ஆக்கபூர்வமான பதில்களாக அவை அமைந்திருக்கவில்லை.

உதாரணத்திற்குப் ''பளையில் அமைக்கப்பட்ட மின் காற்றாலை சம்பந்தமான ஒப்பந்தத்தில் சபையின் செயலாளரைக் கையொப்பமிட வைத்தது ஒரு மிகத் தவறான செயல்'' என நான் சுட்டிக் காட்டினேன். அத்துடன் சபையின் செயலாளருக்கும்,நிறைவேற்றுஅதிகாரசெயற்பாட்டிற்கும் உள்ள தொடர்பு குறித்தும் வினவியிருந்தேன்.

அத்துடன்,அதன் முதல் வருடத்தில்அந்தமின்காற்றாலையை நிறுவிய நிறுவனங்களிடமிருந்து கொடையாக நிதியைப் பெற்று வடக்கு மாகாண சபையின்வரவிற்குஉட்படுத்தப்பட்டு மாகாண சபையின் பாதீட்டினூடாகவே செலவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியிருந்தேன்.

அதனை விடுத்து அவர்களிடமிருந்து நேரடியாக வாகனங்களைப் பெற்றமை தவறான செயல் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். ஆனால், இதற்கு பதிலளிக்காமல் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் அவர்களிடமிருந்து கொடையாகப்பெற்ற நிதியின் கணக் கையே சபையில் சமர்ப்பித்திருந்தார் முதலமைச்சர்.

அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதித்தேவைகள் மதிப்பீடு தொடர்பாக முதலமைச்சரால் ஓர் ஆலோசகரின் பெயர் குறிப்பிட்டு, ஐக் கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதிகளுக்கு சிபாரிசு செய்ததன் விளைவாகத்தான் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிற்கும், மாகாண சபைக்கும் இடையே அன்று விரிசல் ஏற்பட்டதென்பதை ஐக்கியநாடுகள்சபையின்வதிவிடப் பிரதிநிதியால்வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு 16.10.2015 ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை ஆதார பூர்வமாகக் காட்டியிருந்தேன்.

அதற்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து முதலமைச்சர் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதி என்ன என்பது தொடர்பான நீண்ட ஒரு விளக்கவுரையை வழங்கியிருந்தார்.

சுன்னாகம் நிலத்தடி நீரில் தற்போது ஓயில் கலப்பு இல்லை என ஐக்கிய இராச்சிய உயர் ஸ்தானிகருக்கு முதலமைச்சர் கூறியிருந்தமை தொடர்பாக நான் மாகாண சபையில் கேள்வியெழுப்பியிருந்தேன், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் புலம் பெயர் தமிழர்களின் ஆய்வு அறிக்கையை வைத்தே தான் அவ்வாறு கூறினார் என முதல் வர் பதிலளித்திருந்தார்.

இந்த ஆய்வு அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதை அந்த அறிக்கையினை ஆதார மாகக் காட்டி முதலமைச்சர் தவறாக வழி நடத்தப்படுகின்றார் எனச் சுட்டிக்காட்டியிருந்தேன். இந்த கூற்றுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து, சுண்ணாகம் நிலத்தடி நீரில் ஓயில் மாசு இருக்கின்றதா என்பது தொடர் பான நீண்ட தோர் உரையை முதலமைச்சர் ஆற்றியிருக்கின்றார்.

இவ்வாறாக முதலமைச்சரின் அமைச்சின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் தொடர்பாக மட்டும் ஏறத்தாழ 20 விடயங்களை நான் எனது 21.07. 2017ஆம் திகதி நடைபெற்ற அமர்வின் போதான உரையில் குறிப்பிட்டிருந்தேன். அந்த இருபது விடயங்களில் பதினொரு விடயங்களுக்கு மட்டுமே இன்று தனது பதிலைத் தெரிவித்த முதலமைச்சர், இரு விடயங்களில் நான் குறிப்பிட்டமை சரியென்பதை ஏற்றுக் கொண்டார்.

ஏனைய விடயங்கள் தொடர்பாக நீண்ட விளக்கவுரை ஆற்றியிருந்தும், என்னால் வினைத்திறனற்றவை எனச் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை. இது மறைமுகமாக முதலமைச்சர் வினைத்திறனற்ற செயற்பாடுகள் தொடர்பான எனது குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்கிறார் என்பதைத் தெளிவாக்குகின்றது.

முதலமைச்சர் தனது உரையில் என்னால் சுட்டிக்காட்டப்பட்ட வினைத்திறனற்ற செயற்பாடுகள், ஊடகங்களின் விளம்பரத்திற்காகக் கூறப்பட்ட விடயங்களென்றும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட விடயங்களுக்குப் புறம்பான அரசியல் விடயங்களைக் கூறி முழு விவாதத்தையுமே திசைதிருப்ப முயன்ற வேளையிலே எனது கடும் எதிர்ப்பின் விளைவாக அது கைவிடப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

## நீர்கொழும்பில் கட்டடம் இடிந்து விழுந்தது மூன்று பேர் காயம் ; மீட்புப் பணிகள் தீவிரம்!



கட்டடநிர்மாணவேலைகள் இடம்பெற்றுவரும் மாடிக் கட்டடமொன்றின் கொங்றீட் இடிந்து விழுந்ததில் அதில் சிக்கி மூவர் காயமடைந்துள்ள நிலையில், மீட்கப்பட்ட இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் ஒருவர் சிக்கியுள்ளார் எனவும் அவரை மீட்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நீர்கொழும்பு, பெரியமுல்லை பாலத்திற்கருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.18

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு: 'தன்னம்பிக்கை'

(இ)

## நல்லூரில் இன்று நாடகத் திருவிழாவில் மூன்று நாடகங்கள்

நல்லூர், ஓக.18

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத்திருவிழா' இன்று வெள்ளிக்கிழமை இறுதி நாளாக நடைபெறவுள்ளது.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும்.

இதில் பேராசிரியர் நந்தியின் 'சிங்கப் பூர் டொக்டர்' (நகைச்சுவை நாடகம்) இன்று வெள்ளிக் கிழமை இரவு 7 மணிமுதல் 8 மணி வரையும், தே.தேவானந்தின் 'மாயச்சடங்கு' (சிறுவர் நாடகம்), இரவு 8.10 மணி முதல் 8.40 மணி வரையும். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'கூடி விளையாடு பாப்பா' (சிறுவர் நாடகம்) இரவு 8.45 மணி முதல் 10 மணி வரையும் இடம் பெறவுள்ளன.

(இ)




யாழ்ப்பாணம், ஓக.18

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: பொன் ஸ்ரீ.வாமதேவன், வயலின்: கா.குகபரன், மிருதங்கம்:நா.சிவசுந்தரசர்மா, கெஞ்சிரா: சி.செந்தூரன்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று மன்னார் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் 'அழகால் உன்னைப் பெறலாமே' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார்.

(ச)

# தரம் 5 மாணவர்கள், பெற்றோருக்கு பரீட்சை தொடர்பாக அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக.18

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் நடைபெறவுள்ள நிலையில், அப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான ஆலோசனைகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம். என்.ஜே. புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

**மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

வினாப்பத்திரங்கள் இரண்டு வழங்கப்படும். முதலாவது வினாப் பத்திரம் காலை 9.30 மணி முதல் காலை 10.15 மணி வரையில் 45 நிமிடங்கள். இரண்டாவது வினாப் பத்திரம் 10.45 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை 1 மணியும் 15 நிமிடங்கள்.

காலை 9.00 மணிக்கு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களைப் பரீட்சை மண்டபத்தினுள்ளே அமரச் செய்ய வேண்டும். இது தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் தங்களது சுட்டிலக்கங்களை தனது ஆடையின் இடது பக்க மேல் பகுதியில் அணிந்திருத்தல் வேண்டும். விடை எழுதுவதற்கு பேனா அல்லது பென்சில் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்த முடியும்.

பரீட்சை சுட்டிலக்கத்தை தெளிவாக எழுதவும், வினாத்தாளில் 01 ஆம் பக்கத்திலும், 03 ஆம் பக்கத்திலும் இதற்கான பிரத்தியேக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விடை எழுதும்போது வினாப் பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

பரீட்சைவினாத்தாள் கையில் கிடைத்தவுடன் பதற்றப் பட வேண்டாம். வினாப்பத்திரத்தை சிறந்த முறையில் வாசித்து விடை எழுதவும். செய்கைவழிக்கான மேலதிக தாள்கள் வழங்கப்படும்.

**பெற்றோருக்கான ஆலோசனைகள்**

காலம் தாமதிக்காமல் பரீட்சை மண்டபத்துக்கு பிள்ளைகளை அழைத்து வரவேண்டும். பெற்றோர் பரீட்சை மண்டபம் அமையப் பெற்றுள்ள பிரதேசத்திற்குள் பிரவேசிக்க கூடாது.

மாணவர்களின் இடைவேளை நேரத்தில் பெற்றோர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர்களுக்குச் சிறியளவிலான உணவும், தண்ணீர்ப் போத்தல் ஒன்றும் கொடுத்து அனுப்புங்கள்.

பரீட்சைதொடர்பிலான மேலதிக அறிவுறுத்தல்கள் பெற வேண்டியிருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் பெற்றோர் தொடர்புகொள்ளலாம்.

பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ள – 1911, பாடசாலை பரீட்சை ஏற்பாட்டுக் குழு– 0112 78 4208, 0112 78 4537 பொலிஸ் நிலையம் – 0112 42 1111, பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் – 119 (ம)

# நகரச் சுத்தம் தலையானது

**யாழ். நகரைச் சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பாக யாழ். மாநகரசபை வெளியிட்ட செய்திக் குறிப்பு இது.**

நாம் வாழ்கின்ற நகரத்திற்குரிய அழகியலைக் கொடுக்கின்ற முதன்மையான காரணிகளுள் நகரச் சுத்தம் என்பது மிக முக்கியமானதொன்றாகும்.

நகரச் சுத்தமானது மக்களுடைய வாழ்வியக்கத்திற்கும் ஆரோக்கியமான சமூகத்திற்குமான பிரதான காரணியாகின்றது. வெறுமெனவே நகரச் சுத்தம் என்பது மாநகர சபை சார்ந்த செயற்பாடின்றி, மாநகர வாழ் மக்கள் ஒவ்வொருவருக்குமான தலையாய கடமையாக விளங்கு கின்றது.

இச்சீரிய திட் டத்தை மக்கள் மயப்படுத்தி மக்களிற் கூடாக அதனைச் செயற்படுத்துவதும் அவற்றிற்கான பணிகளைச் செய்து கொடுப்பதும் மாநகர சபையின் பிரதான கடமையாகின்றது. நகரச் சுத்தமானது யாழ்ப்பாணம் பற்றிய எண்ணத்தை மேலும் மெருகூட்டி மிளிரச் செய்யும் ஒன்றாகும்.

அந்த வகையில் எமது மாநகர சபையானது திண்மககழிவகற்றல் முகாமைத்துவத்தை மிகவும் சீராகவும் நேர்த்தியாகவும் வெவ்வேறான திட்டங்களுடன் செயற்படுத்த பல முயற்சிகளை எடுத்து வருகின்றது.

எமது யாழ்ப்பாண மாநகரின் சனத் தொகை சராசரியாக 92,000 ஆகக் காணப்படுகின்றது. மேலும் வெவ்வேறு தேவைகளுக்காக பல்வேறு பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாண நகரிற்கு வருகை தரும் மக்களின் சனத்தொகையும் அதிகமானதே. இதனால் எமது பிரதேசத்தில் சேரும் கழிவுகளும் பெருந்தொகையானதென்பது தவிர்க்க முடியாததொன்றே.

எமது சபையால் சமையலறைத்திண்மக்கழிவுகள் சேகரிப்புகள், ஒழுங்கு முறைமையொன்றின் கீழ் அகற்றப்பட்டு வருகின்றன. வீடுகளில் முறையாக சேகரித்து வைத்து எமது கழிவகற்றல் வாகனங்களில் சமர்ப்பிக்கமுடியும். உணவு விடுதிகள் தாம் உருவாக்குகின்ற கழிவுகளின் அளவுகளிற்கேற்ப கட்டணம் செலுத்தி அவற்றை அகற்ற முடியும்.

அதே போன்று வீட்டு உரிமையாளர்களும் கட்டணம் செலுத்தி, வீட்டு இடிபாடுகள் மற்றும் தாவரக்கழிவுகள் போன்றவற்றை அகற்றும் ஏற்பாடும் எம்மிடம் உண்டு. அவை தவிர்ந்த உக்காத அபாயகரமான கழிவுகளான பற்றறிகள், பொலித்தீன், பிளாஸ்ரிக், மின்குமிழ்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் என்பனவற்றைத் தரம் பிரித்து எமது சேகரிப்பு மையங்களில் நேரடியாக வழங்க முடியும். இச்சேகரிப்பு மையங்களை நிறுவி திண்மக் கழிவு சேகரிப்பினை முறைமைப்படுத்துவதற்காக ரூபா 26 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இச் சேகரிப்பு மையங்கள் நல்லூர், குருநகர், பாஷையூர்,வண்ணார்பண்ணை, அரியாலை, காக்கைதீவு ஆகிய இடங்களில் இயங்க ஆரம்பிக்கின்றன. மிகவும் அபாயகரமான கழிவுகளை (சிகிச்சைக் கழிவுகள், வாகன சுத்திகரிப்புக் கழிவுகள், சாயக்கழிவுகள் போன்றன) உருவாக்குபவர்கள் அவற்றை அகற்ற சிறப்புப் பொறிமுறைகளைத் தாமாகவே உரிய தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று நிறுவிக்கொள்ள வேண்டும்.

இத் திண்மக்கழிவு சேகரிப்புச் செயற்பாட்டில் தடங்கல்கள் ஏதும் இருப்பின் மாநகர சபையுடன் தொடர்புகொண்டு அதனை நிவர்த்திக்கலாம். வீதிகளின் ஓரங்களிலும் மூலைகளிலும் தரம்பிரிக்காமல் மூட்டைகளாகப் போடப்படும் திண்மக்கழிவுகளை சேகரித்துத் தரம் பிரிப்பதென்பது மிகக்கடினமான காரியம் ஆகும்.

'எனது பின் முற்றத்தில் இல்லைத் தானே' (Not in my backyard) என்ற ஒருவித எண்ணமே அதனை வெளியில் வீசுவதற்குக் காரணமாகின்றது. விலங்குகள் அவற்றை வீதியில் இழுத்துப் பரப்புகின்றன. சுத்தம் செய்யப்பட்ட சில மணித்துளிகளிலேயே கழிவுச் சிதறல்களால் கண்கொண்டு பார்க்க முடியாத இட மாகிப் போகின்றன நம் வீதிகளும், ஒழுங்கைகளும், மனிதர் சிறிது இளைப்பாறலாமென நிற்கும் மரநிழல் குடைகளும்.

இவ்வாறான செயற்பாடு வீட்டு முற்றத்திற்கு வருபவரை வீதியிலேயே அசுத்தமாக்கி வீட்டினுள் நோய்க்கிருமிகளைக் காவி வரும் செயற்பாட்டிற்கு உதவுகிறது என்பதை வீசுபவர்கள் சிந்திக்க வேண்டும். இத் திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளை சீரிய முறையில் ஒவ்வொருவரும் கூட்டுப் பொறுப்புணர்வோடு மேற்கொள்ளும் பட்சத்தில் தொடர்ந்து வரும் மழைக்காலங் களில் எமது மாநகரை டெங்கு போன்ற நோய் நொடிகளற்ற அழகிய பிரதேசமாக மிளிர வைக்க முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

- யாழ். மாநகர சபை.

# சைவசமய தீட்சை வழங்கல்

நல்லூர்கந்தன் ஆலயபெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சைவ சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும் என உலக சைவத்திருச்சபை தெரிவித்துள்ளது.

தீட்சை பெற விரும்புவோர் தங்களது பெயர், நட்சத்திரம் என்பவற்றினை நாவலர் மணி மண்டபத்திலுள்ள அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர். தீட்சை பெறுவோரிற்கு கைநூல் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

தீட்சை பெறுவோர் சிறிய செம்பு அல்லது பேணி ஒன்று மட்டும் கொண்டுவந்தால் போதும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

# கடற்படைத் தளபதியாக தமிழரான சின்னையா?



யாழ்ப்பாணம், ஓக.18

கடற்படைத்தளபதியாக ரியர் அட்மிரல் ஜெர்மி லியன்ருறு ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடற்படைத் தளபதியாக இருந்த வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பாது காப்புப் படைகளின் தலைமை அதிகாரியா நியமிக்கப்பட்ட தைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற் றிடத்திற்கே இந்த நியமனம் வழங்கப் படவுள்ளது.

தமிழரான ரியர் அட்மிரல் ஜெர்மி லியன்ருறு ட்ரவிஸ் சின்னையா திருகோணமலையில் பிறந்தவர். இவரது தந்தை டெரில் சின்னையா பல் வைத்தியராக இருந்து பின்னர் கடற்படையில் இணைந்துகொண்டவர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தோல்வியடைய மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ, முப்படையினரையும் சேர்ந்த 40 இற்கு மேற்பட்ட தளபதிகளையும் அதிகாரிகளையும் படையில் இருந்து நீக்கியிருந்தார்.

அவ்வாறு நீக்கப்பட்டவர்களில் ரியர் அட்மிரல் ஜெர்மி லியன்ருறு ட்ரவிஸ் சின்னையாவும் ஒருவராவார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று ஜனாதிபதியான பின்னர், மஹிந்த அரசால் அரசியல் பழிவாங்கல் காரணமாக நீக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் 40 தளபதிகள் மற்றும் அதிகாரிகள் மீண்டும் உள்வாங்கப்பட்டனர்.

நீக்கப்பட்டபோது கடற்படைக் கொமடோர் தரத்தில் இருந்த ஜெர்மிலியன்ருறு ட்ரவிஸ் சின்னையா பின்னர் ரியல் அட்மிரலாக பதவி உயர்வுடன் கடற்படையில் மீள இணைத்துக் கொள்ளப்பட்டார்.

தற்போது கிழக்கு கடற்படைக் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றும் சின்னையா, யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல்வேறு கடற்சமர்களில் பங்குபற்றியவர் எனவும் கூறப்படுகின்றது. (ம)

# கொக்குவில் பிரதேசத்தில் உந்துருளி மீட்கப்பட்டது

## ரவுழக் கும்பல் பயன்படுத்தியது?

யாழ்ப்பாணம், ஓக.18

ஆவா குழு என்ற ரவுடிக் கும்பல் குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தியதாகக் கூறப்படும் உந்துருளி ஒன்று கொக்குவில் பிரதேசத்தில் உள்ள பயன்படுத்தப் படாத தோட்டம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உந்துருளியை அவதானித்தவர்கள் அதன் உரிமையாளரை அறிய முயற்சித்தனர். அதன்போதே அப்பிரதேசத்தில் ரவுடிக் கும்பலின் நடமாட்டம் இருந்தது என பிரதேச மக்களால் கூறப்பட்டது.

இந்நிலையில், உரிமைகோரப்படாத அந்த உந்துருளி தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற யாழ். சிறப்பு பொலிஸ் அணியினரால் உந்துருளி மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. (ம)






காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இந்த அறிவிப்புத் தேவையா?

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தாம் பதவியேற்ற காலம் தொடக்கம் ஒரு விடயத்தைத் தொடர்ந்து வருகின்றார். அது, அவ்வப்போது சர்ச்சையை - பட்டையை - கிளப்பும் கருத்துக்களை வெளியிடும் அவரது போக்காம்.

மனதில் படும் கருத்தை தாரதம்மியம் பார்க்காமல் வெளியிடுவது அவரது பண்பியல்பு. அதுவே அவரது பலம்; பலவீனமும் கூட.

தாம் வெளியிடும் கருத்துக்களினால் சர்ச்சைகளில் சிக்குவதும், அதனால் உருவாகும் நெருக்கடிகளை எதிர்கொள்வதுமாகவே கடந்த நான்கு ஆண்டுகளாக அவரது முதல்வர் பணி தொடர்கின்றது.

அப்படி அவரது கருத்து நிலைப்பாட்டால் உருவான சர்ச்சைகளைப் பட்டியலிட்டால் அது நீண்டு போகும்.

அண்மையில் கூட புளொட் அமைப்பைப் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு அவர் மாமனிதர் சிவராம் படுகொலையுடன் தொடர்புடையவர் எனப் பேசப்படுகின்றமையால், மாகாண அமைச்சர் பதவியை அவருக்குத் தரவே முடியாது என்று பட்டவர்த்தனமாக - வெளிப்படையாக - எழுத்தில் பதில் அனுப்பியவர். அதனால் எழுந்த சிக்கல்கள் அடங்குவதற்கு முன்னர் இப்போது அதே உறுப்பினரை தமது அமைச்சரவைச் சகாவாக்கிக் கொள்ள வேண்டிய கட்டத்திலும் வந்து நிற்கின்றார் முதல்வர்.

இப்போது அவர் கூறிய மற்றொரு கருத்து மீண்டும் சிக்கலைக் கிளப்பியிருக்கின்றது. தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸில் சேரும்படி வடக்கு மாகாண முதல்வர் என்ற கோதாவில் அவர் அழைத்திருக்கின்ற மைதான் இப்போது பிந்திய சர்ச்சையாகும்.

இது தொடர்பில் சாட்டையடி கொடுத்திருக்கின்றார் அவரின் அதே கூட்மைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன்.

அதிகாரப் பகிர்வு மூலம் தமிழர் தாயகத்துக்குரிய பொலிஸ் அதிகாரம் இன்னும் தமிழர்களுக்குப் பகிரப்படவில்லை. அது தென்னிலங்கைச் சிங்கள அரசின் பிடியில்தான் உள்ளது. இந்த நிலையில் பொலிஸில் சேருமாறு - அதுவும் வடக்கு மாகாண முதல்வர் பதவியில் இருந்து கொண்டு - வேண்டுவது - கண்டனத்துக்குரியது எனச் சீறுகின்றார் சிவமோகன்.

அவர் கருத்தில் தவறு இருப்பதாகக் கூறுவதற்கு ஏதும் இல்லை.

தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய கட்டாயத்திலேயே தமிழர் சமூகத்தைத் தென்னிலங்கைச் சிங்களமும் அதன் அரசும் வைத்துள்ளன.

இப்படிப் போராடும் தமிழ் மக்களை தமிழ்ப் பொலிஸாரை வைத்தே - தமிழரைக் கொண்டு தமிழர்களை - அடக்கும் கைங்கரியத்தை தென்னிலங்கை முன்னெடுப்பதற்கு முதல்வரின் இந்தக் கோரிக்கை வசமாக உதவி செய்கின்றது என்பது மருத்துவர் சிவமேகன் எம்.பியின் கருத்து.

அப்படி எம் கைகளைக் கொண்டே எங்கள் கண்ணைக் குத்தும் வேலையை தென்னிலங்கை அரசு இங்கு நாசூக்காகக் கட்டவிழ்க்கும் வேளையில், இங்கு சிங்கள அரசின் அடக்குமுறை தொடர்கின்றது என சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்த இயலாத இக்கட்டு இந்தச் செயற்பாட்டின் மூலம் தமிழர்களுக்கு ஏற்படும் என எம்.பி. சிவமோகன் கூறுகின்றமையும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதேபோல பொலிஸில் இணைக்கப்பட்ட தமிழர்களின் - குறிப்பாகத் தமிழ் யுவதிகளின் - நிலைமை மற்றும் கடந்த காலப் பட்டறிவு ஆகியவை தொடர்பில் சிவமோகன் கிளப்பும் சந்தேகங்கள் கூட முறையாகக் கவனிக்கப்பட வேண்டியவைதான்.

மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அழைத்தார் என்பதற்காக மரியாதையின் நிமித்தம் யாழ். மாவட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்பட மூத்த அதிகாரிகள் இரண்டு தடவைகள் முதல்வரின் பொலிஸ்துறைக் கூட்டத்துக்கு சமுகம் தந்திருக்கின்றனர். அது முதல்வரின் பதவிக்கும் வயது மூப்புக்கும் அரசியல் நிலைமைக்கும் கொடுத்த மரியாதையன்றி வேறில்லை. அது முதல்வரின் பதவி அதிகாரத்தால் கிட்டியதல்ல என்பது வெளிப்படையானது.

அப்படி பொலிஸாரை அழைத்துக் கூட்டம் வைக்கும் பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்கு இன்னும் தெளிவாகவும், உறுதியாகவும் வழங்கப்படவேயில்லை. சட்டப் புத்தகத்தில் தமக்கு அதிகாரம் இல்லாத ஒரு கூட்டத்தை அழைத்து - அத்தகைய இரு கூட்டங்களுக்கு மூத்த பொலிஸ் அதிகாரிகள் வருகை தந்தார்கள் என்பதற்காக - தமக்கு பொலிஸ் அதிகாரம் இருக்கின்றது என நினைத்துக் கொண்டு முதல்வர் இந்த அழைப்பை விடுத்தாரோ என்னவோ தெரியவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தமிழருக்கும் காட்டப்பட்ட மாயமான் தான் இந்தப் பொலிஸ் அதிகாரம்.

இப்போது, கூட்டமைப்புத் தலைமை நல்லாட்சி அரசுடன் நடத்தும் பேச்சுக்களின்போது இந்த பொலிஸ், காணி அதிகாரங்களை எல்லாம் மாகாணங்களுக்கு வழங்குவதற்குத் தயார் என்ற நிலைப்பாடு பெரும்பாலும் உறுதியாக எட்டப்பட்டுவிட்டது.

ஆனால், 'கிடைத்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி' என்ற பாணியில் தெளிவாக, எழுத்தில் வரையறுக்கப்பட்ட சமஷ்டி, வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி என்பவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இடம்பெறாத எந்தத் தீர்வும் வேண்டவே வேண்டாம் என்று ஒற்றைக் காலில் அடம்பிடிப்பவராக முதல்வர் நிற்கின்றமையால், இப்போது வந்துள்ள இணக்கப்பாடும் மேல் கொண்டு நகருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இணக்கம் காணப்பட்டுள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை வாங்கி வைத்துக் கொண்டு, அடுத்த கட்ட உரிமைக் கோரிக்கைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் முதல்வர் தரப்பும் ஏனையோரும் இணங்குவதாகவும் இல்லை; விடுவதாகவும் இல்லை.

இந்தச் சித்துவத்தில் இல்லாத பொலிஸ் அதிகாரத்தை வைத்துக் கொண்டு 'இல்லாத மேடையில், எழுதாத நாடகத்தில் நடிப்பதுபோன்ற' இந்த அறிவிப்புகள் தேவைதானா?

எவ்வாறு சம்பந்தனும் சுமந்திரனும் தனித்துத் தீர்வு முயற்சி குறித்துத் தீர்மானிப்பது கூடாதோ, அதேபோன்று, இது மாதிரியான கொள்கை விடயத்தில் வடக்கு முதல்வரும் தன்னிச்சையாகக் கருத்து வெளியிடக்கூடாது. பல மட்டங்களிலும் பேசித் தீர்மானித்த பின்னரே அதனை அறிவிக்க வேண்டும்.

# ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நீதியமைச்சருக்கு எதிராகக் குற்றச்சாட்டு!



கொழும்பு, ஒக. 18

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கொழும்பில் பிரதமர் தலைமையில் இடம்பெற்றது.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றைய தினம் முற்பகல் 10.30 மணி அளவில் செயற்குழுக் கூட்டம் ஆரம்பமாகி 12.10 மணி அளவில் முடிவடைந்துள்ளது.

தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஊழல், மோசடி வழக்குகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பதிலளித்த விஜயதாச ராஜபக்ஷ தான் எந்தத் தவறும் செய்யவில்லை எனக் கூறியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளை துரிதப்படுத்த தன்னால் எதுவும் செய்ய முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், நீதியமைச்சரின் கூற்றை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா, தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார்.

மேலும், அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை முடிவுக்கு கொண்டு வரும் வரை தான் ஓயப் போவதில்லை என கூறவில்லை எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கூட்டத்தின் முடிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நீதியமைச்சரும் தனியாக கலந்துரையாடுவதற்காக வேறு ஓர் இடத்திற்கு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# கடற்படையினரின் வளாகத்தில் விடுதலைப் புலிகளின் தோணிகள்!

முல்லைத்தீவு, ஒக. 18

முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால் கடற்படையினரின் கட்டுப்பாட்டு வளாகத்தில் 4 தோணிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 30 அடி நீளமுடைய இந்தத் தோணிகளை 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கடற்பிரிவினர் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு தடை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளின் கடற்பிரிவின் உதவியுடன் இந்தத் தோணிகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு மீனவர்களுக்கு உதவியதாக அந்த பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல்கள் ஆழ்கடலில் தரித்து நிற்கும் போது அதில் இருந்து வர்த்தகப் பொருள்களை இறக்குவதற்கும் இந்தத் தோணிகளைப் பயன்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது.



இது போன்ற தோணிகளை யாழ்ப்பாணம் - கிளாலிக் கடலில் பொதுமக்கள் சேவைக்காக விடுதலைப் புலிகள் பயன்படுத்தினர் எனவும், இதற்குப் பரிபாசை பெயராக பாதை என்று அவர்கள் அழைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதி கடற்படை வளாகத்தில் 4 தோணிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மஹிந்தவின் உறவினர்களுக்கு எதிராகவும் வழக்கு !



ஜி.எல். பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உறவினர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திற்கு எதிராக விசேட நீதிமன்றம் அமைத்து, வழக்குத் தொடர்ந்து, தண்டனை வழங்கி, சிறையில் அடைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தயோசனை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து நாம் வேதனை அடைகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## இரும்புச் சத்து அகத்துறுஞ்சலை அதிகரிக்கச் செய்திடுவோம்!

விற்றமின் 'சி' அதிகமுள்ள புளிப்பான பழங்களை உணவு வேளையின் பின் உண்போம்.

சமையலின் பின் எலுமிஞ்சம் பழத்தை கறிகளுக்கு சேர்த்திடுவோம்.

கடலை, பயறு போன்றவற்றை 24 மணித்தியாலம் ஊற வைத்து முளையரும்பிய பின்னர் சமைத்திடுவோம்.

உணவு உண்பதற்கு முன்பாகவோ பின்பாகவோ தேநீர், கோப்பி அருந்துவதை தவிர்த்திடுவோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

19.08.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : புநர்பூசம் மு.இ 7.33 வரை
திதி : துவாதசி காலை 6.42 வரை
சுபநேரம் : 3.05 – 4.35 வரை
இராகுகாலம் : 9.05 – 10.35 வரை

# மத்தள மீது இந்தியத் தரப்பு தீவிர ஆர்வம்: ஆதிக்கத்தை குறைக்க இலங்கை முயற்சி!

கொழும்பு, ஒக. 18

மத்தள விமான நிலையத்தை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் திட்டம் குறித்து இன்று பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்து, 40 ஆண்டுகளுக்கு அதனை இயக்குகின்ற திட்டம் ஒன்றை இந்திய அரசு முன்வைத்திருந்தது.

கடந்த மே மாதம் இந்திய அரசு இந்த யோசனையை முன்வைத்திருந்தது. இந்த திட்டம் குறித்து, மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான குழுவொன்றை அமைப்பதற்கு இலங்கை அமைச்சரவையும் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்த நிலையில், இந்தத் திட்டம் தொடர்பாக இலங்கை அரசு இந்தியத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

குறிப்பாக, இந்தியாவுக்கு 70 வீத பங்குகளையும், இலங்கைக்கு 30 வீத பங்குகளையும் பகிரும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள யோசனையைத் திருத்துவதில் இலங்கை கவனம் செலுத்தவுள்ளது.




இந்தியாவுக்குப் பெரும்பான்மைப் பங்குகளைக் கொடுக்காமல், கூடுதல் பங்குகளை வைத்திருப்பது குறித்து இலங்கை பேசவுள்ளது.

இந்தியாவுக்கு 49 வீதமும், இலங்கைக்கு 51 வீதமும் என்ற அடிப்படையில் பங்குகளைப் பகிர்ந்து கொள்வதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்த இலங்கை அரசு இன்றைய பேச்சுக்களில் முயற்சிக்கவுள்ளது.

அதேவேளை, இந்த கூட்டு முயற்சி உடன்பாட்டில், விமானப்போக்குவரத்து கட்டுப்பாடு, சிவில் விமான ஒழுங்குமுறைகளை இந்தியாவுக்கு வழங்க முடியாது என்றும், தனியே வர்த்தக செயற்பாடுகளை மட்டுமே கொடுக்க முடியும் என்றும், போக்குவரத்து அமைச்சின் செயலர் நிஹால் சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவின் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல, 40 ஆண்டுகள் குத்தகைக்காலத்தை குறைப்பதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது,

அதேவேளை, மத்தளவிமான நிலையத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தமதிப்பீட்டு அறிக்கையைப் பொறுத்தே, பங்குகளின் அளவு தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரயிலில் பாய்ந்து தற்கொலைக்கு முயன்றவர் ரயில்வேக் காப்பாளரால் காப்பாற்றப்பட்டார்!

வவுனியா, ஒக. 18

வவுனியா, மன்னார் வீதி ரயில் கடவைக்கு அண்மித்த பகுதியில் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்ய முன்ற குடும்பஸ்தர் ஒருவரை அந்தப் பகுதியில் கடமையில் இருந்த ரயில்வேக் கடவைக் காப்பாளர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா-மன்னார்வீதியில் காமினிமகாவித்தியாலயத்திற்கு அண்மித்ததாக அமைந்துள்ள ரயில்வேக் கடவைக்கு அண்மித்த ரயில் பாதையில் வயது முதிர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நீண்ட நேரமாகப் படுத்திருந்திருந்துள்ளார்.

இதனை அவதானித்த அயலில் வசிப்பவர்கள் அவரை அவ்விடத்தில் இருந்து அகற்ற முயன்ற போது அவர் மறுப்பு தெரிவித்தார். தான் தற்கொலை செய்யப்போகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா -மன்னார்வீதி ரயில் கடவையில் கடமையில் இருந்த உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தப் பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற உத்தியோகத்தர் அவரை அங்கிருந்து கட்டாயப்படுத்தி அகற்றி ரயில் கடவைக் காப்பாளரின் அறைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது அங்கு நின்றவர்கள் இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையம் மற்றும் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் ஆகிய வற்றில் உள்ள தமிழ் மொழி மூல அவசர தொலைபேசி இலக்கம் என்பவற்றுக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வவுனியா பொலிஸார் அந்த நபரை மீட்டனர். அவர் தற்கொலை செய்யப் போகிறார் என தெரிவித்தமையாலும் மது போதையில் அவர் இருந்தமையாலும் அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதேவேளை, தனது மகளின் கணவர் தன்னை மதிக்கிறார் இல்லை எனத் தெரிவித்தே இந்தக் குடும் பஸ்தர் தற்கொலை செய்யப்போகிறார் எனத் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. இவர் வவுனியா, கல்நாட்டிய குளம் பகுதியில் வசித்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-100)

# மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கா? பேராபத்து எனப் பதறுகிறார் விமல் வீரவன்ஸ!

கொழும்பு, ஒக. 18

மத்தள விமான நிலையத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்குக் கொடுத்ததை விட 100 மடங்கு அதிகம் ஆபத்தானது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்தள உடன்பாடு இலங்கைக்கு மிகவும் பாதகமான நிலையை ஏற்படுத்தும். எந்த வொரு சூழ்நிலையிலும், அம்பாந்தோட்டை உடன்பாட்டை மத்தளவுடன் ஒப்பீடு செய்ய முடியாது.

மத்தள விமான நிலையத்தால் பிராந்திய சக்தியான இந்தியாவுக்கு எந்த வர்த்தகப் பெறுமதியும் கிடைக்கா. எனவே இதனை இந்தியா எப்படிப் பயன்படுத்தப் போகிறது என்ற கேள்வி உள்ளது.

நாட்டின் தேசிய சொத்துக்களை நீண்டகாலக் குத்தகைக்கு வெளிநாடுகளுக்கு கொடுக்கும் போது, இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயங்கள் குறித்து கவனிக்க வேண்டும்..

இந்தக் கள நிலைவரங்களைத் தற்போதைய அரசு அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. இது பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை.

அவர்களுக்குத் தனியே, மேற்குலகத்தையும், இந்தியாவையும் திருப்திப்படுத்துவது தான் ஒரே தேவையாக இருக்கிறது. - என்றும் அவர் கூறியுள்ளார்.

# தாதியர் சங்கத்தின் நேற்றைய வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது!

கொழும்பு, ஒக. 18

அரச தாதியர் சங்கம் நேற்று ஏற்பாடு செய்திருந்த வேலை நிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

கலந்துரையாடல்களில் தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைத்தமையால் இந்த வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாக கைவிடோம் என அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்ன பிரிய தெரிவித்தார்.

இதேவேளை, எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ள உறுதிகள் எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பளத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு அதிகாரிகள் உடன்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தடை விவகாரத்தில் மாற்றம் ஏதும் கிடையாது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக. 18

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் தடை தொடர்பில் அரசு மேற்கொண்ட கொள்கைத் தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்றும் அந்தத் தீர்மானத்தை முறையாகவும், விரைவாகவும் அமுல்படுத்துவதற்கான பின்னணியை உருவாக்கும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்படுகிறது எனவும் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அஸ்பெஸ்டஸ் மற்றும் புகையிலைத் தடைக்காக அரசு செயற்படும் முறையிலேயே சுற்றாடலின் இருப்புக்கு கடுமையான சவாலான பொலித்தீன் தொடர்பிலும் தீர்மானத்துக்கு வருகிறது.

நாட்டின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்ற வகையில் அது தொடர்பில் மக்களது மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவது முக்கியமாகும் என்றார்.

அத்துடன், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் ஊடாக அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதியால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்காக அமைச்சுக்கு கிடைத்துள்ள நிதி ஒதுக்கீட்டைச் செலவு செய்வது தொடர்பிலும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, தற்போது நிலவும் வறட்சியால் மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் விவசாய செயற்பாடுகளுக்கான நீர் வழங்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதி விவரங்களைக் கேட்டறிந்தார் நாட்டின் முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விடுவிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மொரகஹகந்த திட்டத்தின் மூலம் விவசாயத்துக்காக தற்போது நீர்விடுவிக்கப்படுகிறது. அந்த நீர்த்தேக்கத்தில் நீரை சேமித்ததால் விவசாயிகளுக்கு நீரை வழங்க முடிந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்குரிய தற்போது பாவிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் ஜனாதிபதியால் அறிக்கை கோரப்பட்டிருந்தது.

அந்த கட்டிடங்களை சுற்றுலா விடுதிகளாக நிர்மாணித்து சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இடங்களாக மாற்றி, வருமானம் ஈட்டும் திட்டத்தை தயாரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தற்போது கைவிடப்பட்டுள்ள அமைச்சின்குரிய கட்டடங்களை அரசின் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கக்கூடிய சாத்தியம் தொடர்பிலும் அவ்வாறில்லா விட்டால் அவற்றை அகற்றி விடுதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நிர்மாணத்துக்கு தேவையான மணலை பெறுவதிலுள்ள பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், கடல் மணலை பாவிப்பதற்கு மக்களைப் பழக்கப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் நிர்மாணங்களின் போது கடல் மணலை பாவித்து முன்மாதிரியை வழங்குவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (க)

# சம்மாந்துறை நௌசாத்தை மு.காவில் இணைக்கப் பேச்சு!

மட்டக்களப்பு, ஒக.18

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சம்மாந்துறைப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஏ.எம்.நௌசாத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சம்மாந்துறைப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு மிகவும் பின்னடைந்து காணப்படும் நிலையில் எதிர்வரும் தேர்தல்களை எதிர்நோக்கும் வகையில் முன்னாள் எம்.பி. நௌசாத்தை கட்சியில் இணைப்பதற்கு அமைச்சர் ஹக்கீம் விரும்பியுள்ளார்.



அந்த வகையில் ஏ.எம். நௌசாத்துடன் மு.காவினர் பேச்சில் ஈடுபட்டிருக்கின்றனர்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சம்மாந்துறை சார்பில் உங்களை வேட்பாளராக நிறுத்துவதுடன் தற்போது மாகாண சபை உறுப்பினராக உள்ள ஐ.எல். எம்.மாஹீருக்கு தேர்தல் கேட்க வாய்ப்பு வழங்கமாட்டோம் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இதனைக் கவனமாக செவிமடுத்த ஏ.எம்.நௌசாத், அமைச்சர் ரவூப் ஹக்கீமை பற்றிய கடந்தகால அனுபவம் இருக்கிறது என்றும் தான் மு.காவில் இணைந்துகொள்வதாயின் சில கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஏ.எம்.நௌசாத் முன்வைத்த கோரிக்கை, மு.காவால் நிறைவேற்றமுடியாத பெரும் கோரிக்கை எனத் தெரிய வருகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலிலும் தன்னை வேட்பாளராகப் போட வேண்டும் என்ற கோரிக்கையும் அதில் ஒன்றாகும்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹீர் தமது கட்சியின் உயர்மட்டத்தின் மீது கடும் கோபத்தில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்கு விசுவாசமாகவும், நேர்மையாகவும் செயற்படும் தனக்கு கட்சித் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாதகமாகச் செயற்படுகின்றமை கவலையளிக்கின்றது எனவும், எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விலகுவதில்லை எனவும் தனக்கு நெருக்கமான ஆதரவாளர்களிடம் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹீர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரும் சம்மாந்துறைப் பிரதேசத்தில் புதியவர்களை மு.காவுக்குள் இணைப்பதை விரும்பவில்லை என்றும் கூறப்படுகின்றது.

நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு தொகுதிவாரித் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டால் சம்மாந்துறைத் தொகுதியிலிருந்து இலகுவாக நாடாளுமன்றம் செல்லமுடியும்.

இந்த எண்ணத்துடனுள்ள நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.நௌசாத் உள்வருகின்றமையை கடைசிவரை மன்சூர் எம்.பி. விரும்பமாட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக 25 ஆண்டு நிறைவு!





வவுனியா, ஒக. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுகள் வவுனியா வளாகத்தின் முதல்வர் த.மங்களேஸ்வரன் தலைமையில் நேற்று பம்பைமடுவில் உள்ள வளாகத்தில் இடம்பெற்றது.

வவுனியாவளாகத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான, கணித பாடங்களில் நடத்தப்பட்ட புதிர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வவுனியா வளாகத்தில் கடந்த 20 வருடங்களாக பணியாற்றி ஓய்வு பெற்ற முதல்வர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, விஷேட விருந்தினராக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மோகன்லால் கிரேரோ, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, காதர் மஸ்தான் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஹசன் அலி மீண்டும் மு.காவுக்குள்; அமைச்சர் ஹக்கீம் கடும் பிரயத்தனம்!

கொழும்பு, ஒக. 18

தூய முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டாளரான எம்.ரி.ஹசன் அலிக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கி முஸ்லிம் கூட்டமைப்பு உருவாவதைத் தடுப்பதற்கான காய் நகர்த்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து தூரமாகி, இன்று தூய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாக மக்கள் மத்தியில் களமிறங்கியுள்ள ஹசன் அலி மற்றும் பசீர் சேகுதாவூத் ஆகியோர் எதிர்



வரும் தேர்தல்களில் முஸ்லிம் கூட்டமைப்பாக போட்டியிடுவதற்கான பேச்சுகளில் ஈடுபட்டுவருகின்றது.


இந்த நிலையில், மீண்டும் ஹசன் அலி தரப்பை கட்சியோடு ஒன்றிணைப்பதற்கான பேச்சை அமைச்சர் ஹக்கீம் முடுக்கிவிட்டுள்ளார்.

அந்தவகையில், தூய முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டாளரான எம்.ரி.ஹசன் அலியின் சகோதரரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான எம்.ரி.நிஸாமுடன் மு.காவின் தலைவர் அமைச்சர் ஹக்கீம் நீண்டநேரம் உரையாடியுள்ளார்.

தேசியப்பட்டியல் எம்.பி. பதவியுடன், அமைச்சுப் பதவியையும் ஹசன் அலிக்கு உடன் வழங்குவதற்குத் தான் தயாராக உள்ளார் என்று இதன்போது அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வயலின் இசையும் பயிற்சிப் பட்டறையும்!





வவுனியா,ஒக. 18

வயலின் சிறப்பு இசை நிகழ்வும் பயிற்சிப் பட்டறையும் வவுனியா, கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.

யாழ். இந்திய துணைத் தூதரத்தின் இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான பேராயம், ஐ.சி.சி.ஆர் மற்றும் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து இந்நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல வயலின் இசைக் கலைஞர்களான மைசூர் கலாநிதி மஞ்சுநாத் மற்றும் நாகராஜ் சகோதரர்களின் வயலின் சிறப்பு இசை நிகழ்வும் பயிற்சிப்பட்டறையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், வவுனியா மேலதிக அரசஅதிபர் தி. திரேஸ்குமார், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இ. இராதாகிருஷ்னண், கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். பி நடராஜ், மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், வவுனியா அன்பக சிறுவர்கள், மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் இசை பயிலும் - விசேடமாக வயலின் பயிலும் - மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-100)

# துப்பாக்கிகளைக் காட்டி கட்டுப்படுத்தும் கலாசாரம் நல்லாட்சியில் இல்லை!



## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிக்கிறார்

துப்பாக்கிகளைக் காட்டி யாரையும் கட்டுப்படுத்தும் அரசியல் கலாசாரம் எமது நல்லாட்சியில் இல்லை. சுயாதீன மானசுட்ட நகர்வுகளின்மூலமே நல்லாட்சி அரசு சகல பிரச்சினைகளையும் கையாள்கின்றது என பெரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேலும், ஒரு நீதிமன்றம் அல்ல பத்து நீதிமன்றங்களை அமைத்தாவது திருடர்களைத் தண்டிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீதி மறுசீரமைப்பு நகர்வுகளில் நாம் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றோம். பேருந்து போக்குவரத்து தொடர்பில் நேற்றுமுன்தினம் முதல் நாம் முன்னெடுத்த நகர்வுகள் எமக்கு வெற்றியளித்துள்ளன.

அதேபோல் வீதி சட்டங்களைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம்உள்ளது.அதன்போது வரும் எதிர்ப்புகள் அனைத்தையும் நாம் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

முன்னைய ஆட்சியின்போது அதிக நிதி செலவில் வீதி நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். ஆனால், நாம் அவ்வாறான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இதில் கொள்ளைகள், ஊழல் - மோசடிகள் எதற்கும் இடமில்லை.

துப்பாக்கிகளைக் காட்டி எவரையும் அச்சுறுத்தியோ, கட்டுப்படுத்தியோ நல்லாட்சி அரசு செயற்படவில்லை. நாம் சட்டத்தின் மூலமாக மட்டுமே எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

முன்னர் துப்பாக்கிகள் மட்டுமே பேசின. அரசு அமைதியாக இருந்தது. எவரும் கருத்துக்களை முன்வைக்க இடமளிக்கவும் இல்லை. அபிவிருத்திகளின் பின்னணியில் இருந்த ஊழல்கள் தொடர்பில் எவரும் கருத்துக்கூற முடியாதநிலைமை காணப்பட்டது.

ஆனால், இன்று நாம் அனைத்தையும் மாற்றியுள்ளோம். சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கறோம் எம்மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதேபோல் இராணுவம் மற்றும் பொலிஸ் துறையினர் தேவையான சந்தர்ப்பங்களில் சரியாகச் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும், திருடர்கள் தொடர்பில் அரசு மௌனம் காப்பது சற்று ஏமாற்றமான விடயமாக இருந்தாலும் கூட விரைவில் சட்ட நகர்வுகள் பலமடையும்.

கடந்த காலத் திருடர்கள் மட்டுமல்ல நிகழ்கால அரசின் திருடர்களும் கூட சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்படுவார்கள். இவர்களைத் தண்டிக்க ஒரு நீதிமன்றம் அல்ல பத்து நீதி மன்றங்களையாவது அமைத்து இவர்களைத் தண்டிக்க வேண்டும். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# விஜயதாஸ ராஜபக்ஷவை நீக்குவதா? கடுமையாக எதிர்க்கிறது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, ஓக. 18

நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும்முயற்சிகளுக்கு, சியாம் மகா நிக்காயவின் அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட தேரி ஞானரத்னதேரர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டையும் பௌத்தத்தையும், எந்த நபர் அல்லது எந்த அமைப்பு பாதுகாக்கிறதோ அவர்களுக்கு மகா சங்கம் எப்போதும் பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறது. இது இலங்கையின் வரலாறு.

நாட்டின் நலன்களுக்காக பேசும் விஜயதாஸ ராஜபக்ஷவை துன்புறுத்தவே அவருக்கு எதிராகநம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கிய செயற்பாடுகளைஅம்பலப் படுத்தியமையால் தான், அவரைவெளியேற்றும் சூழ்ச்சி நடக்கிறது என்றும் சியாம் மகா நிக்காயவின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு பூட்டு!

மட்டக்களப்பு, ஓக. 18

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகம் தவிர்ந்த அனைத்துப் பீடங்களையும் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விடுதியிலுள்ள சகல மாணவர்களும், இன்று வெள்ளிக் கிழமை பகல் 12 மணிக்கு முன்பு தங்களுடைய உடைமைகளுடன்விடுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.




கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையைக் கருத்திற் கொண்டு, பல்கலைக் கழகத்தின் பேரவை, திருகோணமலை வளாகம் தவிர்ந்த வந்தாறு மூலை வளாகம் மற்றும் மட்டக் களப்பு சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் ஆகியவற்றை மூடுவதற்குத் தீர்மானித்தது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(க)

# மாகாண சபைத் தேர்தல்கள் ஒரே தினத்தில்; அதற்கான ஏற்பாடுகள் 20 ஆவது திருத்தத்தில்!

## கூறுகிறார் அமைச்சர் தயாசிறி ஜயசேகர

மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு மாகாணசபைகளின்அங்கீகாரத்தையும் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

மேலும், மாகாணசபைகளின் கருத்துக்களைக் கேட்ட பின்னரே இதுதொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தல்களைப் பிற்போடுவதற்கான எந்த முயற்சிகளையும் அரசு எடுக்கவில்லை. மாறாக, மாகாண சபைத் தேர்தல்களை ஒரேதினத்தில் நடத்துவதற்கே அரசு முயற்சிக்கிறது.

அதற்காகவே 20 ஆவது திருத்த சட்டம் கொண்டுவரப் படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு மாகாணசபைக்கு தேர்தலை நடத்து வதற்கு 80கோடி ரூபா செலவாகிறது. மேலும், அரசியல் கட்சிகளின் நேரம், பொதுமக்களின் நேரம் என்பன வீணடிக்கப்படுகின்றன.எனவே ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்துவதே சிறப்பாக அமையும்.

மேலும், 20 ஆவது திருத்த சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அளித்தோம்.

அதாவது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறை மாற்றம் நாடாளுமன்றத் தேர்தல் முறை மாற்றம்உள்ளிட்ட அனைத்தும் இந்த 20 ஆவது திருத்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட வேண்டும்.

எமது இந்த முயற்சியால் மாகாண சபைகளின் தேர்தல் பிற்போடப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வேண்டும் என்பதே எமது நோக்கம். இதன்மூலம் மாகாணசபைத் தேர்தல்கள் பிற்போடப்படுகின்றன என யாராவது உணர்வார்களாயின் அவர்கள் நீதி மன்றத்தை நாடலாம்.

எமது முயற்சி தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதை அடிப்படையாக கொண்டதாகும். மேலும், இந்த 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு மாகாண சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைத்திருக்கிறது. எனவே, 20 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் மாகாண சபைகளின் கருத்துக்களும் பெறப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கூட்டு எதிரணியினர் எவரும் ஆளும் கட்சியில் இணையார்!

## ஷெஹான் சேமசிங்க எம்.பி. உறுதியாகத் தெரிவிப்பு

கூட்டு எதிரணியினர் எவரும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளமாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

புஞ்சி பொரளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப்போவதில்லை.

கூட்டு எதிரணியினர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போகின்றார்கள் என நகைப்பிற்குரிய கருத்துக்களை வெளியிட வேண்டாம்.

எதிர்வரும் நாள்களில் வெறுமையடையப் போவது கூட்டு எதிர்க்கட்சியா அல்லது அரசா என்பதனை பொறுத்திருந்து பார்க்க முடியும்.

சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் வரையில் அதற்கு கூட்டு எதிரணி, எவ்வித ஆதரவையும் வழங்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் இணைந்துள்ளனர்!



## வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவிப்பு

வடக்கில் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர் என வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலும் தம்மாலான உதவிகளை இராணுவத்தினர் செய்து வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்கம் ஏற்படுவதற்கு பெரிதும் தடையாக இருப்பது கல்வியே. சிங்கள மகா வித்தியாலயம், தமிழ் மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம் என நம்முள்ளே பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய வகையில் பாடசாலைகள் தனித்தனியாக உருவாக்கப்பட்டுள்ளன.

இதற்கு மாறாக சிறிசேன, நடராசா, முகமட் ஆகியோர் ஒன்றாக ஒரு இடத்தில் அமர்ந்து படிக்கின்ற வகையில் பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். குறைந்தது பாடசாலையை விட்டு வெளியேறிய தன் பின்னர் என்னுடன் படித்த எனது நண்பன் நடராசா என்று பேசக்கூடிய வகையில் நாம் செயற்பட வேண்டும்.

நல்லிணக்கத்தை தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவரும் இணைந்து செயற்படுவதன் மூலமே உருவாக்க முடியும். இன, மத, குலம் என்ற அனைத்தையும் மறந்து நாம் ஒன்றாக பயணிக்க வேண்டும்.

வடக்கில் தற்போது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற பகுதிகளில் படிப்படியாக அந்த பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு சொந்த காணிகள் வழங்கப்படுகின்றன.

மேலும், மக்களை குடியமர்த்துவதற்காக நல்லாட்சி அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனை வலுப்படுத்த மத்திய அரசின் உதவிகள் அனைத்தையும் நான் பெற்றுக்கொடுப்பேன் எனத் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கில் இராணுவத்தினர் அபிவிருத்திப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலும், அவர்களின் கல்வி, போக்குவரத்து போன்றவற்றிலும் தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்துவருகின்றார்கள்.- என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (க)

## தினசரி ராசி பலன் 18.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 02 ஆம் நாள் ஏகாதசித்திதி பகல் 10.01 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம். திருவாதிரை இரவு 9.03 மணி வரை. பின்னர் புனர்பூசம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 10.41 மணி முதல் 12.14 மணி வரை. சுபநேரம் மாலை 6.05 மணி முதல் 7.36 மணி வரை. இன்று ஏகாதசிவிரதம். திவசம் செய்யவேண்டிய திதி: ஆவணி மாத தேய்பிறை துவாதசி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** மத்திமமான நாள். எதிலும் அலைச்சலும், பிரயாசையும் அதிகமாகும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு சற்றுச் சிரமம் நிலவும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

**ரிஷபம் :** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலை அமையும். வீடு கட்டும் செயல் முன்னேறும். புதிய தொழில் தொடங்க வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் தாராளமாகும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம் :** கவலையான நாள். தனவரவு குறையும். செலவினங்கள் அதிகரிக்கும். உறவினரால் தொல்லைகள் உண்டாகும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**சிம்மம்:** இன்பமான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். உறவினர்கள், நண்பர்கள் மிக அன்னியோன்யமாக நடந்து கொள்வார்கள்.

**கன்னி:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றமும், சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம் :** சுபீட்சமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமும், லாபமும் உண்டாகும். அசையாச்சொத்து வாங்கும் வாய்ப்புகள் அமையும்.

**விருச்சிகம் :** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பப்பிரச்சினை உருவாகும். எதிரிகளின் பேச்சில் நிலைதடுமாற நேரிடும்.

**தனுசு :** மத்திமமான நாள். எடுக்கும் காரியங்களில் தாமதம், தேக்கநிலை நிலவும். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். திருமண காரியங்கள் தள்ளிப் போகும்.

**மகரம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. எடுத்த காரியங்களில் வெற்றியும் பணவரவில் தாராள நிலையும், குடும்பத்தில் அமையும். புத்திர, புத்திரிகளால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம் :** அனுகூலமான நாள். வருமானம் உயர்வடையும் குடும்ப உறவில் மேன்மையும், உற்றார், உறவினரிடையே மதிப்பும், கௌரவமும் ஏற்படும்.

**மீனம் :** துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். பிள்ளைகளால் அகௌரவம் ஏற்பட்டுவிலகும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால் அனுஷம் கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் ஜனனமானோர் இந்நாளில் நற்கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

# இலங்கை கடல் வளத்தை மதிப்பிட வருகிறது நோர்வேயின் புதிய ஆராய்ச்சிக் கப்பல்!

## இலங்கைக்கான அதன் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

அடுத்த ஆண்டு இலங்கைக் கடற்பரப்புக்குள் வருகை தரவுள்ள நோர்வேயின் புதிய ஆராய்ச்சிக் கப்பலான பிரிட்டோவ் நன்சன், இலங்கைக் கடற்பரப்பில் கடல் வளங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளது என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான நோர்வேத் தூதுவர் தூர்பியோன் கவுஸத்சேத்த தெரிவித்துள்ளார்.





வங்காளவிரிகுடாவுக்குள் இந்தக் கப்பலின் வருகையைத் திட்டமிட்டு இற்றைப்படுத்தும் நிகழ்வை அங்கீகரிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரக வள மூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மஹிந்த அமரவீரவும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நோர்வேத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் புதிய ஆராய்ச்சிக் கப்பல், அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின் உயிர்ப் பல்வகைமையை மையப் படுத்திய கடல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான நோர்வே உதவித் திட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான வாய்ப்பாகும்.

இது, நோர்வேயின் புதிய சமுத்திர மூலோபாயத்தின் பகுதியாகும். இந்தச் செயற்பாடானது, துறைசார் எல்லைகளைத் தாண்டியும் சர்வதேச எல்லைகள் கடந்தும் அறிவுப் பகிர்வை அதிகரிப்பதால், நோர்வே இதை சமுத்திரங்களுக்கான கூட்டுப்பங்காண்மையாகக் கருதுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் நோர்வே மீன்பிடித்துறை அமைச்சுகளுக்கு இடையிலான தொழில் நுட்ப மற்றும் நிறுவன ஒத்துழைப்பின் பகுதியாக நடைபெறும் இந்த மதிப்பீட்டுக்கான அங்கீகாரம் இருநாடுகளதும் உயர் அரசியல் தலைமைகளிடமிருந்து கிடைத்துள்ளது.

கடல்வளங்களின் தற்போதைய நிலை, மீன்வளத்தின் இருப்பு, கண்ட மேடைகள், சாய்வுகளில் பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்படும் மீன்வளங்களை ஆய்வு செய்தல் ஆகியவை இம்மதிப்பீட்டின் நோக்கங்களாகும்.

இலங்கையில், இவ்வாறான இருப்பு மதிப்பீடு, 1978 முதல் 1980ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இதற்கு முந்திய பிரிட்டோவ் நன்சன் கப்பலால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# கேகாலையில் கோர விபத்து: இருவர் பலி; 3 பேர் காயம்!

கொழும்பு, ஓக. 18

கேகாலை, அவிஸ்ஸாவளை வீதியில் பிந்தெனிய, பிட்டகல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் கார் ஒன்று வீதியை விட்டு விலகி குருகொட ஓயாவில் விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 57 வயதுடைய காரின் சாரதி மற்றும் 31 வயதுடைய ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது என பிந்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட 5 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# கண்ணதாசனுக்கு சிறை என்றால்?

## புலிகளின் நிழல் அரசை அங்கீகரித்த ரணிலுக்கு தூக்கா?





அண்மைக் காலத்தில் சமூக ஊடகங்களில் அதிக அளவு பரப்பப்பட்ட ஒரு காணொலிக் காட்சியில், இலங்கை நீதிபதியான ஈழத் தமிழர் இளஞ்செழியன் மீதான கொலைத் தாக்குதலில் அவருடைய மெய்ப் பாதுகாவலர் சுட்டுக்கொல்லப்பட்டமையும், கையறு நிலையில் அவரின் மனைவியிடம் நீதிபதி இளஞ்செழியன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டமையுமான விடயங்கள் இடம்பெற்றன. கல்நெஞ்சுக்காரரையும் அந்தச் சம்பவங்கள் கரைய வைத்து விடும்!

ஈழத் தமிழர்களுக்கான செயற்பாட்டாளர்களின் இதயத்தில் முள்ளைப்போல பதிந்த இன்னொரு சம்பவம், தமிழீழத்தின் பிரபல மிருதங்க வித்வானாக விளங்கும் கணேசசுந்தரம் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனைவழங்கப்பட்டமையாகும்.

விடுதலைப் புலிகளின் நிழல் அர சாங்கம் நடந்துகொண்டிருந்த கால கட்டத்தில், தமிழீழ நுண் கலைக் கல்லூரியின் இயக்குநராக தணிகைமாறன் எனும் கண்ணதாசன் பணியாற்றினார். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவின் கீழ் இவர் செயற்பட்டவர். கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் பகுதியில் 2007 ஜனவரி மாதவாக்கில், மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியைக் கட்டாயமாகப் படையில் சேர்த்தார் என அவருடைய தாயார், கண்ணதாசன் மீது 2014 ஆம் ஆண்டு மார்ச்சில் வழக்கு தொடுத்தார். அடுத்த ஆண்டே பயங்கரவாதத் தடுப்பு பொலிஸால் கைதுசெய்யப்பட்ட கண்ணதாசன், பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார். இது தொடர்பாக, வவுனியா மாவட்ட மேல்நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு மே மாதத்தில் வழக்குத் தொடுக்கப்பட் டது. அதில், கடந்த 25ஆம் திகதி கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறப்பட்டது.

முந்தைய தாக்குதலில் கொல்லப்பட்ட மெய்ப்பாதுகாவலர் சிங்களவர் என்பதும் தமிழரான நீதிபதி உயிர் தப்பியதுமே முக்கியமாக இலங்கை அரசாலும் சிங்கள அமைப்புகளாலும் பேசப்பட்டது. குறிப்பாக, இது முன்னாள் போராளிகளின் கைங்கரியம் என்று சிங்களத் தரப்பு ஆட்சியாளர்களும் இனவாத அமைப்புகளும் அழுத்தமாகச் சொல்லிவருகின்றன.

இரண்டாவதாக, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கண்ணதாசன். இவர், மிருதங்க வித்வான் என்பதை விட, போராளி இயக்க முன்னாள் பொறுப்பாளர் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கைதுக்கு முன்பு வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத் துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றிவந்தார், கண்ணதாசன். முன்னதாக, முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர் 2009 இல் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து போராளிகளுக்கான வதைமுகாமில் அடைக்கப்பட்டார். இலங்கை அரசின் வார்த்தைகளில் சொல்வதானால், இராணுவத்திடம் சரணடைந்து, அவர்களால் புனர் வாழ்வுப் பயிற்சி அளிக்கப்பட்டவர். அதாவது மற்ற ஈழத் தமிழர் குடிமக்களைப் போல சகஜமான வாழ்க்கைக்குத் திரும்ப உகந்தவர்கள் என கண்ணதாசன் போன்ற 12 ஆயிரம் தமிழ்ப் போராளிகளை இலங்கை அரசு முகாம் களிலிருந்து விடுவித்தது. அதை நேர்மையாக நம்பி, வெளியில் வந்த போராளிகள் அவரவர்செய்யக்கூடிய வேலைகளில் ஈடுபட்டும் திறன்கள் மூலம் படையினர் அல்லாத பொது சிவில் வாழ்க்கைக்குத் திரும்பினார்கள்.

விவரிக்கமுடியாத இழப்பையும் சோகத்தையும் சுமந்துகொண்டு, ஈழத்து மண்ணில் உயிரோடு வாழ வேண்டும் என்பதை ஒரு சவாலாக, அன்றாட வாழ்க்கையை நகர்த்திவருகிறார்கள். இந்த நம்பிக்கையைக் குலைக்கும்படியாகவே, பொது மன்னிப்பு அளிக்கப்பட்டவர்களில் ஒருவரான கண்ணதாசனுக்கு, போர்க் காலத்தில் நடந்த குற்றம் என தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆம், இந்தத் தீர்ப்பை வழங்கிய வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி, இலங்கை அரசின் சட்ட மா அதிபரின் வலியுறுத்தலின் காரணமாகவே தான் அப்படிச் செய்தார் எனக் கூறியிருக் கிறார்.

கவனிக்க.. இனப்படுகொலை என்பதற்குப் பதிலாக போர்க்குற்றங்கள் என மட்டுப்படுத்தி, இரு தரப்பும் குற்றமிழைத்தது என சமப்படுத்தினாலும் தமிழ்ப் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக உலக நாடுகளுக்கு இலங்கை அரசு உறுதியளித்தது. அந்த உறுதிமொழியை அப்பட்டமாக மீறி, கண்ணதாசனுக்கு ஆயுள்தண்டனை விதித்திருப்பதற்கு ஈழத்தமிழர் தரப்பில் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவிக்கக் கூட யாரும் தயாராக அல்லர். ஊடகத்துக்குக் கருத்துக் கூறுவதென்றால் அதைவிட ஆபத்து போல! நாம் தொடர்பு கொண்ட பல்கலைக்கழகப் பேராசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் போன்றவர்கள் கேள்வியைப் பெற்றுக் கொண்டு, பதில் சொல்ல இயலாது எனப் பூடகமாகச் சொல்கிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவைப் போல இல்லாமல், மைத்திரிபால சிறிசேனா ஆட்சியில் தமிழீழப் பகுதியில் அமைதி நிலவுகிறது; நல்லாட்சி நடக்கிறது என்கிற பிம்பம், இதன் மூலம் உடைந்துபோய் இருக்கிறது.

புலம்பெயர் ஈழத்து எழுத்தாளரும் அரசியல் விமர்சகருமான குணா கவியழகனிடம் இது குறித்துக் கேட்டதற்கு, ''வாதத்துக்காக, கண்ணதாசன் செய்த குற்றத்துக்கு ஆயுள் தண்டனை என்றால், விடு தலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை அங்கீகரித்து சமாதான உடன்பாடு செய்துகொண்ட இலங்கையின் பிரதமர் ரணிலுக்குத் தூக்குதண்டனை தான் தரவேண்டும். ஆம், இலங்கை அரசமைப்புச் சட்டத்தை மீறித்தானே, புலிகளின் தலைமையோடு அவர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

புலிகளின் அரசமைப்பான தமிழீழ சட்டக்கோவையின்படி 18 வயது நிரம்பிய எவருக்கும் கட்டாய இராணுவச் சேவை உண்டு; அதன் படி படைக்கு ஆள்களைச் சேர்க்கும் எத்தனையோ பேரில் ஒருவர்தான், கண்ணதாசன்''- எனச் சீறுகிறார்.

மேலும், உள்நாட்டுப் போரில் நடந்த தவறுகளை, இலங்கையின் மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்கமுடியாது; இதைப் போர்க் குற்ற அடிப்படையில் பன்னாட்டு நீதிமன்றம் தான் விசாரிக்கமுடியும். 80-களில் இலங்கை அரசுக்கு எதிராக ஆயுத மேந்திப் போராட்டம் நடத்திய சிங்கள ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு, பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது; இதைப் போல அவர்கள் மீது எந்த வழக்கும் பதியக்கூட இல்லை. அவர்களுக்கு ஒரு நீதி, தமிழ்ப் போராளிகளுக்கு ஒரு நீதியா?

> ''வாதத்துக்காக, கண்ணதாசன் செய்த குற்றத்துக்கு ஆயுள் தண்டனை என்றால், விடு தலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை அங்கீகரித்து சமாதான உடன்பாடு செய்துகொண்ட இலங்கையின் பிரதமர் ரணிலுக்குத் தூக்குதண்டனை தான் தரவேண்டும். ஆம், இலங்கை அரசமைப்புச் சட்டத்தை மீறித்தானே, புலிகளின் தலைமையோடு அவர் ஒப்பந்தம் செய்து கொண்டார். புலிகளின் அரசமைப்பான தமிழீழ சட்டக் கோவையின்படி 18 வயது நிரம்பிய எவருக்கும் கட்டாய இராணுவச் சேவை உண்டு; அதன் படி படைக்கு ஆள்களைச் சேர்க்கும் எத்தனையோ பேரில் ஒருவர்தான், கண்ணதாசன்''

-இரா.தமிழ்க்கனல்-

இந்தத் தீர்ப்பின் மூலம் ஈழத்தமிழரின் தாயகப் பகுதியான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் ஆயிரக்கணக்கானவர்கள் மீது எந்த வழக்கும் போடலாம், எப்படியான தீர்ப்பும் வழங்கலாம் என மறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளுக்கு ஆள் சேர்த்தது எனக் கூறுபவர்கள், வடக்கு-கிழக்கின் 80 சதவிகிதமான ஈழத்தமிழர்களை, போராளிகளுக்கு நிதி கொடுத்தார்கள் என்றோ 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புலிகளின் நிர்வாகப் பணியாளர்களாக இருந்தார்கள் என்றோ மீண்டும் சிறையில் தள்ளலாம். இந்த ஆபத்தை தமிழர் தரப்பு முறியடித்தாகவேணும் என்கிறார் குணா கவியழகன்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தூயவான் வேடம் பூணும் இலங்கை அரசாங்கம், அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கோ வேறு எதற்கோ, தமிழர் எதிர்ப்பு- சிங்கள இனவாதத்தை மீண்டும் கையிலெடுத்திருப்பது,(என்று விட்டது?), ஈழத்தமிழர் மீதான இன்னுமொரு போராகவே இருக்கும்! ★







தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**இந்தியாவின் நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆத்திரமூட்டுவதாக உள்ளன என்று பெய்ஜிங் திரும்பத் திரும்பக் கூறியுள்ளது.**

சர்ச்சைக்குரிய மலைமுகட்டுப் பகுதியிலிருந்து இரு தரப்பினரும் தங்களது துருப்புக்களைத் திரும்பப்




பெறுவதன் மூலமாக டோக்லாம் எல்லை நெருக்கடியைத் தணிக்க முடியுமென புதுடில்லி மீண்டும் மீண்டும் பரிந்துரைத்தது.

ஆனால், சீனாவைப் பொறுத்த வரை இந்தியா தான் ஒருதலைப்பட்சமாக அதன் துருப்புக்களைத் திரும்பப் பெற்று முதல் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதில் அது பிடிவாதமாக உள்ளது.

இந்தியாவின் நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆத்திரமூட்டுவதாக உள்ளன என்று பெய்ஜிங் திரும்பத் திரும்பக் கூறியுள்ளது. முந்தைய எல்லை மோதல்களைப் போலல்லாமல், இந்த பிராந்தியத்தின்மீது புது டில்லி எந்தவித உரிமையையும் கொண்டிராத நிலையில் சீனத் துருப்புக்களுடன் இந்தியப் படையினர் மோதிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், சீனா மற்றும் சிறிய ஹிமாலய முடியரசான பூட்டானுக்கும் இடையிலான ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகத் தான் இது உள்ளது.

மேலும், சர்ச்சைக்குரிய பீடபூமியில் சீன கட்டுமானத் தொழிலாளர்கள் ஒரு சாலையை விரிவுபடுத்துவதை தடுப்பதற்காகவே பூட்டானின் உரிமைக்குரிய பகுதிக்குள் தலையீடு செய்ததாக இந்தியா கூறுவதைச் சீனா எதிர்க்கின்றது. இந்த விடயத்தில் புதுடில்லி ஒருதலைப்பட்சமாக செயற்பட்டதாகவும், மேலும் இந்தியா நீண்ட காலமாக ஒரு பாதுகாப்பாளராகப் காட்டிவரும் அதன் பிராந்தியத்துக்குள் கூறப்படும் சீனாவின் ஊடுருவல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இணைவதற்காகப் பூட்டான் பக்கம் சாய்ந்தது எனவும் பெய்ஜிங் வாதிடுகின்றது. கிட்டத்தட்ட இரண்டு மாத காலமாக நீடிக்கும் டோக்லாம் நிலைப்பாடு பற்றி, இன்று வரை பூட்டான் அரசாங்கம் ஒரே ஒரு அறிக்கையை மட்டுமே வெளியிட்டுள்ளது. அதுவும் கூறப்படும் சீன தாக்குதல் முயற்சி தொடங்கி இரண்டு வாரங்கள் முடிவடைந்த சமயத்தில் வெளியிடப்பட்டது.

பெய்ஜிங்அதன் பொறுமையை இழந்து வருவதாகவும், மேலும் கால வரையின்றி இந்த இக்கட்டான நிலைப்பாடு தொடர்வதை அது அனுமதிக்காது எனவும் மீண்டும் மீண்டும் அறிவித்துள்ளது.

ஒரு சீன இராஜ தந்திரியான வாங் வென்லி என்பவர் இந்தியப் பத்திரிகையாளர் பிரதிநிதிக் குழுவிடம் இந்த தவறான பாதையை இந்தியா தொடருமானால் எங்கள் துருப்புக்களின் உயிர்களை பாதுகாக்க சர்வதேச சட்டத்தின் கீழ் எந்தவித நடவடிக்கையையும் பயன்படுத்திக் கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு. எல்லாம் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்ற சமிக்ஞைகளை அனுப்புவதை இந்தியா நிறுத்த வேண்டும் என்று கூறினார்.

முந்தைய நாள் பிரதிநிதி குழு, பெய்ஜிங்கின் புறநகர்ப் பகுதியிலுள்ள, சீன தாக்கும் வல்லமையை காட்டும் விதமாக மக்கள் விடுதலை இராணுவப் (People's Liberation Army) படையினரின் முகாம் பகுதிக்கு விஜயம் செய்தது. பத்திரிகையாளர்களிடம் உரையாடிய போது PLA இன் மூத்த தளபதி லீ, சீன பிராந்தியத்துக்குள் ஒரு வரம்பு மீறுகையாகவே இந்திய துருப்புக்கள் செயற்பட்டுள்ளன என்று அறிவித்தார். மேலும் அவர், சீன வீரர்கள் எதைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் என்பதைப் பற்றி நீங்கள் குறிப்பிடலாம். நான் ஒரு சிப்பாய் (சீனாவின்) பிராந்திய ஒருமைப்பாட்டைச் சிறந்த முறையில் பாதுகாக்க முயற்சி செய்வேன். நாங்கள் மனத்துணிவையும் உறுதிப்பாட்டையும் கொண்டுள்ளோம் என்றும் சேர்த்துக் கூறினார்.

**சீன-இந்திய உறவுகளில் உருவாகும் இந்த விரைவான மோசமடைதலுக்கு, சீனாவிற்கு எதிரான வொஷிங்டனின் இராணுவ மூலோபாய தாக்குதலுக்கு இந்தியாவின் ஆழ்ந்த ஒருங்கிணைப்புத்தான் சமீபத்தைய எல்லை மோதலுக்கும் மற்றும் வெடிப்புமிக்க உதாரணமாகவும் உள்ளது.**


அரசுக்கு சொந்தமான China Daily பத்திரிகை, கால அவகாசம் உள்ளபோதே புதுடில்லி தன்னை உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற தலைப்பிட்ட ஒரு தலையங்கம் வெளியிட்டதில், எல்லை



பிரச்சினை பற்றிய அமைதியான தீர்வுக்கான சாளரம் மூடப்படுகிறது என்று எச்சரித்தது. இரண்டு படைகளுக்கு இடையே ஒரு மோதல் உருவாவதற்கான எண்ணிக்கை கணக்கீடு தொடங்கிவிட்டது என்பதை சீனாவின் மிகப்பெரிய ஆங்கில மொழி செய்தித்தாள் உறுதிப்படுத்தியதோடு மேலும், தவிர்க்க முடியாத முடிவு நிகழப் போவதைக் காண்பதற்கான நேரம் நெருங்கிக் கொண்டே இருக்கின்றது என்றும் தெரிவித்தது.

சீன-இந்திய உறவுகளில் உருவாகும் இந்த விரைவான மோசமடைதலுக்கு, சீனாவுக்கு எதிரான வொஷிங்டனின் இராணுவ மூலோபாய தாக்குதலுக்கு இந்தியாவின் ஆழ்ந்த ஒருங்கிணைப்புத்தான் சமீபத்தைய எல்லை மோதலுக்கும் மற்றும் வெடிப்புமிக்க உதாரணமாகவும் உள்ளது. பிரதம மந்திரி நரேந்திர மோடி மற்றும் அவரது இந்து மேலாதிக்க பாரதிய ஜனதா கட்சி (BJP) அரசாங்கத்தின் கீழ் இந்தியா பென்டகனின் வழமையான பயன்பாட்டிற்கு தனது இராணுவ தளங்களையும், துறைமுகங்களையும் திறந்துவைத்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முக்கிய ஆசிய-பசுபிக் கூட்டாளிகளான ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இருதரப்பு மற்றும் முத்தரப்பு இராணுவ-மூலோபாய உறவுகளை பெரிதும் விரிவுபடுத்தியுள்ளது. மேலும், தென் சீனக் கடல் சச்சரவு மற்றும் வட கொரிய பிரச்சினை ஆகிய இரண்டின் மீதான வொஷிங்டனின் ஆக்கிரோஷமான நிலைப்பாடுகளை அப்படியே பிரதிபலித்தது.




**பீர் மேக்னாத் தேசாய், அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவிற்கு ஆதரவாக வரும் என்று அவரது நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகின்ற போதும், உடனடியாக நேரவிருக்கும் சீன-இந்திய போர் குறித்து எச்சரித்தார்.**

அதிகாரத்துவத்தின் முதலாளித்துவ மறுசீரமைப்பில் இருந்து எழுச்சி பெற்ற முதலாளித்துவ தன்னலக்குழுவுக்காக பேசுகின்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, சீனாவை சுற்றி வளைத்து, அடிபணியச் செய்வதற்கான அமெரிக்க உந்துதலுக்கு எந்தவித முற்போக்கான பதிலையும் கொண்டிருக்கவில்லை.

உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களின் போர் எதிர்ப்பு உணர்வுளுக்கு எந்தவொரு முறையீட்டையும் விடுக்க இயல்பாகவே தகமையற்றதாக உள்ளது. மேலும், போர்நாடும் தேசியவாதத்தை தூண்டிவிடுகின்ற போது, வொஷிங்டனுடன் ஓர் உடன்பாட்டை தேட முனைவது மற்றும் தனது சொந்த இராணுவவாதக் கொள்கையை அதிகரித்தளவில் கடைபிடிப்பது என இரண்டிற்கும் மத்தியில் இது ஊசலாடுகின்றது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

68




## அத்தியாயம் - V

## எமது வீடு மீது தாக்குதல்

வீடுகளுக்குள் புகுந்து இந்தியப் படையினர், இரக்கமற்ற காடையர்களாக மாறினர். மானுடக் கண்ணியத்தின் அடிப்படைச் சீலங்களையே மீறினார்கள். பாலியல் வன்முறை, திருட்டு, காடைத்தனம், குற்றமற்றவர்களைத் தாக்குதல் ஆகியவை இந்தத் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் கிரமமாக நடந்தன. சந்தேகத்துக்கு உரிய தனி ஒருவரை அடையாளம் காட்டுவதற்கு ஆயிரமாயிரம் பொதுமக்கள் ஊர் மைதானங்களுக்கு நிர்ப்பந்தமாக அழைக்கப்பட்டு பெரிய அடையாள அணிவகுப்புக்கள் நடத்தப்பட்டன. பல முதியவர்களை இந்தியப் படையினர் பலவந்தமாக வீட்டுக்கு வெளியே இழுத்து வீதியோரமாகப் பல மணிநேரம் சுடு வெய்யிலில் நிறுத்தி வைத்திருந்ததை அந்த முதியவர்களே என்னிடம் கூறியிருக்கிறார்கள். வயது வித்தியாசம் பார்க்காது எல்லாப் பொதுமக்களுமே மிகக் கீழ்த்தரமான சிறுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சந்தேகத்தில் கைதானவர்கள் வெளித் தொடர்பு முற்றிலும் மறுக்கப்பட்டு, வெவ்வேறு தடுப்பு நிலையங்களில் இடப்பட்டார்கள். விசாரணை நடவடிக்கை ஒரு சாதாரண நடவடிக்கை ஆகியது. ஆயுதம் தரித்த படையினர் முன்னிலையில் பாதுகாப்பு எதுவும் இல்லாத பெண்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இரங்குமாறு கேட்டு அவர்கள் கெஞ்சிக் கதறினாலும், பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளானார்கள். கூட்டுபாலியல் வன்முறையும் பெரிதும் இடம்பெற்றது. அறுபது வயது மூதாட்டி ஒருவர் தமக்கு நேர்ந்த சிறுமையை என்னிடம் தனியே விவரித்தார். ஆயுதம் தரித்த மூன்று இளவயதுப் படையினர் திடீரென்று வீட்டுக்குள் பாய்ந்து புகுந்து, நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்து அசைய முடியாது கிடந்த முதிய கணவரிடமிருந்து தம்மை பிரித்து அறை ஒன்றினுள் இழுத்துச் சென்று, கூட்டாகப் பாலியல் வன் செயலில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்தார். அவலமான துன்பியல் நிகழ்வை என்னிடம் கூறும்போது, கண்ணியமான அந்தப் பெண் தன் கண்ணீரை அடக்கச் சிரமப்பட்டார். அலுமாரி, பெட்டகங்களைத் துளாவி, பெறுமதி வாய்ந்த நகைகள், பணம், விலையுயர்ந்த பொருள்கள், இனி என்னென்ன பண்டங்கள் தம்மைக் கவர்கின்றனவோ அவற்றையெல்லாம் இந்தியப் படை யினர் அபகரித்தபோது மக்களின் அந்தரங்க வாழ்வின் தனித்துவமும் பங்கப்பட்டது. படைநடவடிக்கை என்று வரும்போதெல்லாம், தமது இராணுவ உணவுக்கு மேலதிக ஊட்டமாகத் தோட்டத்தில் இருக்கும் கால்நடைகளைப் பிடித்துச் செல்வதும் ஒரு வழமையாகியது. ஒழுக்கமோ, கட்டுப்பாடோ இல்லாமல் தங்கு தடையற்று குரூரத்தனத்தையும் பாலியல் வன்முறையையும் வடக்கு, கிழக்கு முழுவதிலும் இந்தியப் படையினர் கடைப்பிடித்தமையால் பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. தமிழ் மக்களின் தேசியப் பெருமையுணர்வு பாடுகேடாக அவமானப்படுத்தப்பட்டது. அதேசமயம் இந்திய ஆக்கிரமிப்புப் படை மட்டில், ஆழமான வெறுப்பையும் உள்ளே கனன்று கொண்டிருக்கும் சீற்றத்தையும் வளர்த்தது.

நாள்கள் வாரங்களாயின. இராணுவ நடவடிக்கைகள் பரவிச் செல்ல, அதற்குச் சமதையாக மக்களிடம் அச்சமும் ஆழம் பெற்றது. ஆனால், நெருக்கடியின் போது, மக்கள் வீறுகொண்டெழுந்து சவாலுக்கு முகம் கொடுப்பது இயல்பு. எதிர்பாராத கோணங்களில் இருந்து துணிச்சலும் தியாகமும் மேம்பட்டன. படையினரின் அடாவடித்தனத்தையும் மீறி மக்களின் மனவுறுதி உடைபடாது தாக்குப் பிடித்தது. ஆகவேநாம் வாழ்ந்த பகுதிகளில் அச்சம் பரவியிருந்தாலும் துணிச்சலும் அனுதாபமும் கொண்ட மக்கள் தங்கள் வீடுகளை எமது பாதுகாப்பிடமாகப் பயன்படுத்த இடமளிப்பது தொடர்ந்து நடைபெற்றது. அதேசமயம் இந்தியர் எங்கே இருக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய சுற்றிவளைப்புத் தேடுதல் எப்படி நடக்கிறது என்பதையும் நன்கு அறிந்திருந்ததால், பிரச்சினை வரக்கூடும் என்று எமக்குத் தோன்றிய பகுதிகளை அடிக்கடி தவிர்த்தோம். ஆனாலும் வடமராட்சியைப் படிமுறையாக தேடும் முயற்சி முடிந்த பின் திடீர் திடீரென்று ஆங்காகங்கே தேடுதல் நடத்துவதில் படையினர் ஈடுபட்டனர். தப்பிப் பிழைக்கும் எம் முயற்சியில் இது ஒரு புதிய சிக்கலைத் தோற்றுவித்தது. எந்த ஒரு பகுதியையும் அவர்கள் குறிவைத்துத் திடீர்த் தேடுதல் நடத்தலாம். அப்படியானால், நாம் வாழும் வீடு, இரவோ, பகலோ எந்த நேரமும் தேடுதலுக்கு உள்ளாகலாம் என்ற அந்தரித்த நிலை எமக்கு. ஒரு கத்திமுனையில் சீவியம்.

## யாழ்ப்பாண சொத்துடைமை முறை

கரணவாய் கிழக்கில் பாதுகாப்பான வீடொன்றுக்குச் சென்றோம். யாழ்ப்பாண சமூக கட்டமைப்பைப் பரவலாகப் பிரதிபலிக்கும் குடும்பக் கட்டமைப்பே இங்கு நிலவியது. இந்தப் பாதுகாப்பான வீட்டில் நிலவிய குடும்ப உறவுகள் நடைமுறையில் உள்ள தாய் வழிச் சமுதாய அமைப்பின் அனைத்து அம்சங்களையும் கொண்டிருந்தது. யாழ்ப்பாண சமூக அமைப்பில் தாய் வழிச் சமுதாய விதிப்படியான பரம்பரைச் சொத்துரிமை முறையே வழக்கில் உள்ளது. ஒரே காணி எல்லைக்குள் அவர்களுடைய வழித்தோன்றல்களும் அடுத்தடுத்தே அமைந்த இரண்டு மூன்று வீடுகளில் வாழ்வது குடும்ப உறவுகளில் நிலவும் பொதுவான கட்டமைப்பாகும். இங்கே ஒரு பெரிய காணிக்குள் இரண்டு சராசரி வீடுகள் இருந்தன. நவீன வசதிகளுடான வீடு இளைய பெண்ணுக்கும் அவருடைய மூன்று பிள்ளைகளுக்கும் உரித்தாக இருக்க பழைய வீடு வயதான அவருடைய தாயாருக்குச் சொந்தமாக இருந்தது. அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மூக்கை நுழைக்க நான்

அலுமாரி, பெட்டகங்களைத் துளாவி, பெறுமதி வாய்ந்த நகைகள், பணம், விலையுயர்ந்த பொருள்கள், இனி என்னென்ன பண்டங்கள் தம்மைக் கவர்கின்றனவோ அவற்றையெல்லாம் இந்தியப் படையினர் அபகரித்தபோது மக்களின் அந்தரங்க வாழ்வின் தனித்துவமும் பங்கப்பட்டது.

விரும்பவில்லையாயினும் திருமணத்தின் போது வீடுகள் பெண்களுக்கே சீதனமாக வழங்கப்படுவதால் இந்த இரண்டு வீடுகளும் பெண்களுக்கே சொந்தமானவை என்று நாம் ஓரளவு உறுதியாக நம்பினோம். நிச்சயமாக இரண்டு வீடுகளில் ஒன்றும் இனிக் காணி முழுவதும், குடும்பத்தின் ஒரே மகளுக்கே வழங்கப்பட்டிருக்கும். தேசவழமையில் வரிக்கப்பட்டது போல பெண்களுக்கே சொத்துடைமை செல்லும் புராதன பாரம்பரியச் சட்டம் இங்கும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கும். இந்தக் காணியில் குடும்ப உறவுகள் எவ்வாறு வழிப்படுத்தப்படுகின்றனவோ, அதேபோல தன்னில்தானே தங்கி நிற்கும் ஒரு சிறிய வீட்டு பொருளாதாரமும்வழிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றுள் முதல் முக்கியமானதாகத் தென்னை மரங்களை எடுத்துக் கொண்டால், இங்குள்ள முதிய பெண், தமது இளவயதில் அவற்றை நாட்டியிருப்பார். அவை குடும்பத்துக்குத் தேவையான தேங்காய்களை வழங்கிக் கொண்டிருக்கும். தமிழ் மக்களின் அனைத்துச் சமையல் பாகங்களிலும் தேங்காய் ஒரு முக்கிய இடம் பெறுகின்றது. தென்னையில் இருந்து கிடைக்கும் ஓலை அடி மட்டைகளை சிக்கனமாக வாழும் இந்தப் பெண்கள் விறகாகப் பயன்படுத்துவார்கள். ஓலையை ஒன்றில் காயவைத்து கிடுகாகப் பின்னி, கொட்டில் கூரைகளை வேயவோ, வீட்டைச் சுற்றி வேலியடைக்கவோ பயன்படுத்துவார்கள். அல்லது விற்றுச் சிறுவருவாய் பெறுவார்கள். பச்சை ஓலையை வார்ந்து அதன் நடுவில் உள்ள ஈர்க்கிலை ஒன்றாகக் கூட்டிக் கட்டினால் அது வளவு கூட்டும் விளக்குமாறாகும்.

பெரும் பயன் தருவது என்றால் அது பனை மரமே. யாழ்ப்பாண இயற்கைச் சூழலின் குறியீடே பனைதான். எங்கு பார்த்தாலும் பனை காடாக நெடிதுயர்ந்து வளர்ந்து நிற்கும். மர உச்சியில் உள்ள ஓலையில் இருந்து அடி வேர் வரை இது மக்களுக்குப் பயன் தரும். ஓலையானது வீடு வேய, வேலி அடைக்க மாட்டுக்குத் தீனியாக உதவும். பழம் சாறு நிறைந்தது. இனிக்கும் பூவின் தண்டிலிருந்து உள்ளூர் மதுவான கள் வடிக்கப்படும். பனை மட்டை விறகாகிறது. அதன் வைரமான தண்டு பல நூற்றாண்டுகளாக தமிழ் வீடுகளின் நடுத்தூணாக விளங்குகிறது. கிழங்கு ஒடியலாக உலர வைக்கப்பட்டுவெவ்வேறு வகை உணவாகிறது. வளம் நிறைந்த இவ்விரண்டு மரங்களும் உள்ளூர் பொருளாதாரத்தின் அடிநாதமாக அமைகின்றன. இவற்றை ஒட்டிய வெவ்வேறு பணிகள் வீட்டுப் பெண்களை நாள் முழுவதிலும் சுறுசுறுப்பாக வைத்திருக்கின்றன.

(தொடரும்...)

# ஆவாக் குழுவுக்கு புலிச் சாயம் ஏன்?

அயோக்கியத்தனமான அரசியல் தமிழர் மீது மீண்டும் பாய்ச்சப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் புலிகள் மீதான தடையை நீக்குவதாக அறிவித்தது. ஆனால் ஐரோப்பிய ஒன்றிய அரசியல் சாம்ராஜ்யம் புலிகள் தடை தொடரும் என அறிவித்தது.

இதன் பின்னணியில்தான் ஓர் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 'ஆவா குறுப்' புத்துயிராக்கமும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் மிக அழகாக இராணுவ புலனாய்வு நிகழ்ச்சிநிரல்களுடன்கருக்கட்டியுள்ளன.

ஆவா குழுவுக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கும் ஏன் முடிச்சு போடப்பட்டது?

ஆவா குழுவுக்கு ஏன் பயங்கரவாத முலாம் பூசப்பட்டது?

இதன் சதித்திட்டங்கள் என்ன?

உந்தும் சக்திகள் எவை?

நல்லாட்சியின் கபட நோக்கம் என்ன?

தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கும் யாழில் நடக்கும் சமூக விரோத செயற்பாட்டுக்கும் ஏன் முடிச்சுப் போடப்படுகின்றது?

பயங்கரவாதத் தடைச்சட்டம் புலிகள் இயக்கத்திற்கான சிறப்புச் சட்டம்.

தமிழர் மீதான ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தைத் திணிப்பதற்கு அல்லது நல்லாட்சி அரசாங்கம் காலத்தை கடத்துவதற்கு மீண்டும் புலிப்பயங்கரவாதம் தலை தூக்கிவிட்டது என்ற தோற்றப்பாட்டை உருவாக்கி நல்லாட்சி அரசு தனது ஆட்சிக்காலத்தைக் கடத்துவதற்குத் திட்டம் தீட்டி, ஒரு நாடகம் ஆவா குழுவின் பெயரால் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆவா குறுப் நாடகத்திற்கான திரைக்கதை, வசனம் ஏற்கனவே எழுதப்பட்டு விட்டது. சட்ட நடவடிக்கை மற்றும் தீர்ப்புகளும் ஏற்கனவே வரையப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து புலிகள் நிதி அனுப்புகின்றனர் எனவும், முன்னாள் புலிகள் அதனைப் பயன்படுத்த, ஆவா குறுப் என்ற பெயரில் புலிகளின் மீள் உருவாக்கம் இடம்பெறுவதாகவும், மீண்டும் புலிகளின் பயங்கரவாதக்



கலாசாரத்தை உருவாக்கு திட்டம் முன் னெடுக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

எனவே வடக்கில் இராணுவம், பொலிஸ், அதிரடிப்படை நிலை நிறுத்தப்படும். இதற்கான தடயங்களை உருவாக்கும் முயற்சியில் ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் ஐயாவினதும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனினதும் வாய்கள் பூட்டப்பட்டு அல்லது அவர்கள் பாதுகாக்கப்படும் நிகழ்ச்சி நிரல் தான் ஆவா குறுப்.

ஆவா குறுப் விவகாரத்தை கையில் எடுத்த T.I.D பயங்கரவாத விசாரணைப் பிரிவு, புலிகள் வெளிநாட்டில் இருந்து நிதி அனுப்பினார்களா? சந்தேக நபர்கள் முன்னாள் போராளிகளா? - என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தான் விசாரணை வியூகத்தை அமைத்துள்ளது.

யாழ்.குடா நாட்டில் முன்னாள் போராளிகள் மீது குறிவைக்கப்படுகின்றது. T.I.D யும் விசேட அதிரடிப்படையும் இணைந்து யாழ்ப்பாணத்தில் சுற்றி வளைப்புக்களையும் கைதுகளையும் நடத்துகின்றன.

கோப்பாய் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் எனவும், இவர்கள் வெளிநாடு ஒன்றில் இருந்தே ஆவாக் குழுவாக இயக்கப்படுகின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அதனை உறுதி செய்யும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குண சேகர தெரிவித்தார்.



வெளிநாட்டிலிருந்து எந்த நரிக் கூட்டம் ஆவா குழுவுக்கு பணம் வழங்குகின்றது என்பதைக் கண்டறிய T.I.D யாழ்ப்பாணத்தில் சிவில் உடையில் களம் இறக்கப்பட்டுள்ளது. இதேசமயம் இலங்கைப் பாதுகாப்பு படைகளால் தயாரிப்படுத்தப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட முன்னாள் போராளிகளைக் கொண்டும் ஆவா குறுப் இயக்கப்படுவதாகவும் T.I.D தகவல் உண்டு.

இது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் புலனாய்வு வலைப்பின்னலின் சதி நடவடிக்கை என்ற தோரணையிலும் பொலிஸ் தரப்பின் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆவா குழு சமூக விரோத குழு அல்ல.

இது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு குழு.

அது அரச பாதுகாப்பு படைகளுடன் சேர்ந்து இயங்கும் செல்லப் பிள்ளைகளாக வளர்க்கப்படுகின்றது.

ஆவா குழு என்பது புலிப் பூச்சாண்டி காட்டுவதற்காகவும் வடிவமைக்கப்பட்ட ஒரு குழு. யாழ்ப்பாணத்தை ஒரு குழப்பநிலைக்குள் வைத்திருப்பதற்காக அரச தரப்பால் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு குழுவும் கூட.

ஆவா குழு விசாரணை என்பது யாழ்.மாவட்டத்தில் வைத்து விசாரிக்கப்பட வேண்டிய விடயம். யாழ் மாவட்ட பொலிஸாரும் யாழ்.மாவட்ட நீதிமன்றமும் யாழ் மாவட்ட குற்றப் புலனாய்வு திணைக்களமும் தேவை ஏற்பட்டால் யாழ்.மாவட்ட T.I.D யும் உண்மையில் செய்ய வேண்டிய பணி.

ஆனால் இதன் உண்மைத் தன்மையை மூடி மறைப்பதற்காகவும் அரச சதிச் செயல் வெளித்தெரியாமல் இருப்பதற்காகவும் ஆவா குழுக் கைதிகள் கொழும்பு கொண்டு செல்லப்படுகின்றனர். கொழும்பில் வைத்து கைது செய்யப்படுகின்றனர் என நாடகம் அரங்கேற்றப்படுகின்றது.

பிரதான சந்தேக நபர் எனப்படும் ஆவா குழு தலைவர் சக்திவேல் நாதன் நிசாந்தன் அல்லது நிசா விக்டர் கொழும்பில் கைது செய்யப்பட்டார். இவர்களுடன் தொடர்புபட்டவர்கள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர வினால் நேரடியாக விசாரிக்கப்படுவார்கள் எனக் கூறப்படுவது வேடிக்கையாகவே உள்ளது.

அதியுயர் விசாரணை என்றால் அது T.I.D மட்டத்தில் நடைபெறும். ஆனால் இது பொலிஸ்மா அதிபர் மட்டத்தில் நடை பெறுவது வேடிக்கை ஆக உள்ளது. புலிகளின் மூத்த தளபதிகள் கைது செய்யப்பட்டபோது கூட பொலிஸ் மா அதிபர் பதவியில் இருப்பவர்கள் புலித் தளபதிகளை அவர்களின் சந்தோசத்திற்காக பார்வையிட்டு, சிங்களவர்களின் உயரிய பண்பாட்டின்படி நட்பு ரீதியாக கலந்துரையாடிவிட்டுச் செல்வதுதான் மரபும், சம்பிரதாயமும்.

**வெளிநாட்டில் இருந்து புலிகள் நிதி அனுப்புகின்றனர் எனவும், முன்னாள் புலிகள் அதனைப் பயன்படுத்த, ஆவா குறுப் என்ற பெயரில் புலிகளின் மீள் உருவாக்கம் இடம்பெறுவதாகவும், மீண்டும் புலிகளின் பயங்கரவாதக் கலாசாரத்தை உருவாக்கு திட்டம் முன் னெடுக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.**

ஆனால் சிறு மழைக்கு முளைக்கும் ஆவா குழு காவாலிகளை பொலிஸ் மா அதிபரே நேரடியாக விசாரணை செய்வார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிணுங்குவதன் பின்னணி ஏதோ ஒன்றை மறைப்பதற்கும் பாதுகாப் பதற்கும் பொலிஸ் திணைக்களம் முயற்சிக்கின்றது என்ற சந்தேகத்தையே தருகின்றது.

ஆவா குழு விசாரணைகள் T.I.D யின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் நீதிமன்றத்திற்கு விசாரணை விடயத்தைக் கொண்டுசெல்லத் தேவையில்லை. நீண்ட காலம் நீதிமன்றம் கொண்டு செல்லாமல் கொழும்பு நான்காம் மாடி யிலும் பூசாவிலும் வைத்து பொலிஸாரே விசாரணை செய்யலாம்.

குற்றத்தின் உண்மைத்தன்மையும், பின்புலமும் வெளியுலகத்திற்கு மறைக்கப்பட்டு, அரசாங்கம் எதை சொல்ல விரும்புகின்றதோ அதை பொலிஸ் தரப்பு சொல்லச் செய்யலாம். அதுவே ஊடகங்களுக்கு செய்தியாக வரும். விரும்பியதை மறைக்கலாம்; விரும்பியதை சொல்லலாம்.

T.I.D விசாரணை பீடத்திற்கு தமிழ் ஊடகவியலாளர்கள் செல்வது இல்லை.

புலிகளின் பெயரால் ஆவா குழு உருமாற்றப்பட்டு, ஊடக அறிக்கை யாக்கப்பட்டு, பொலிஸாரின் கண்டு பிடிப்பாக்கப்பட்டு, உலகத்தின் முன் புலிகள் புத்துயிர் பெற்றுவிட்டார்கள், என்ற அறிக்கை வரும்.

அவர்களை அடக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்ற பாணியில் தமிழர்களை அடக்கவும், அழிக்கவும் சிங்கள அரசுகள் புத்தி சாதுரியமாக சதித் திட்டங்களை தீட்டி காய்களை நகர்த்துகின்றன.காய்களை சிங்கள ஆட்சியாளர்கள் எப்படி நகர்த்துகின்றார்கள் என்பதை புரிந்து கொள்வதற்கு கூட அரசியல் சாணக்கியம் அற்றவர்களாக தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நீதி மன்றத்தின் புலிகள்மீதான தடை நீக்க அறிவிப்பின் எதிரொலிதான் ஆவா குழு உருவாக்கமும் அதன் மீது பயங்கரவாத தடைச் சட்டம் ஏவப்பட்டிருப்பதுமாகும்.


ரணில் ஐயாவின் குள்ளநரி விளையாட்டைத் தமிழர்களாகிய நாம் பார்த்துக்கொண்டிருப்போம்.ரசித்துக் கொண்டிருப்போம், சிரித்துக்கொண்டிருப்போம்.

எங்களால் என்ன செய்ய முடியும்?

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் புலிகள் மீதான தடையை நீக்குவதாக அறிவித்தது. ஆனால், ஐரோப்பிய ஒன்றிய அரசியல் சாம்ராஜ்யம் புலிகள் தடை தொடரும் என அறிவித்தது.

இதன் பின்னணியில் தான் ஒரு அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் ஆவா குறுப் புத்துயிராக்கமும் பயங்கரவாத தடைச்சட்டமும் மிக அழகாக இராணுவ புலனாய்வு நிகழ்ச்சி நிரல்களுடன் கருக்கட்டியுள்ளன. தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தைப் பின் தள்ளுவதற்கான ஒரு சதி திட்டமே ஆவா குழு உருவாக்கமும் அதன் மீதான பயங்கரவாத தடைச் சட்டமும் ஆகும்.

*நன்றி- இணையம்*



# வட மாகாண பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வழங்கக் கோருகிறார் சிவசக்தி எம்.பி.!

வவுனியா, ஓக. 18

வட மாகாண பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுங்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 14 ஆம் திகதி வவுனியா, தாண்டிக்குளம் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

பாதுகாப்பு ஊழியர் மற்றும் பாதுகாப்பு தடை இல்லாத நிலையில், சமிக்ஞை விளக்கு மட்டும் பொருத்தப்பட்டிருந்த காரணத்தாலேயே இந்த முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளாகி அதன் உரிமையாளர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார் என்பதைத் தங்கள் கவனத்துக்கு கொண்டுவருகிறேன்.

அந்த இடத்தில் கடந்த 15 ஆம் திகதி நிரந்தர பாதுகாப்புத் தடை அமைக்கவும் பாதுகாப்பு கடவை காப்பாளர் ஒருவரை நியமிக்கக் கோரியும் பொது மக்கள் ரயிலை வழிமறித்து கவனவீர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

தாண்டிக்குளம் ரயில் கடவை பாதையை நாள் ஒன்றுக்கு ஆயிரத்து அதிகமான பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் கடந்து செல்கிறார்கள்.

ஆனால், இந்த கடவையில் சமிக்ஞை விளக்கைத் தவிர ரயில் கடவைக் காப்பாளர்களோ அல்லது ரயில்வேக் காப்புத் தடைகளோ இல்லாத காரணத்தால் விபத்துக்கள் நடைபெறுவதற்குக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் வட மாகாணத்தில் தொடர்ச்சியாக எரிகின்ற நிலைமையிலும், சில பழுதடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த சமிக்ஞை விளக்குகள் மட்டும் ரயில் கடவையை பொது மக்கள் கடப்பதற்கு உதவியாக அமைவன என எதிர்பார்க்க முடியாது.

யுத்தத்திற்குப் பின் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட நான்கு வருட காலத்தில் 41 விபத்துக்கள் நடைபெற்றுள்ளன.

இதில் 35 பேர் பரிதாபகரமாக உயிர் இழந்துள்ளார்கள் என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இந்த விபத்துக்கள் பெரும்பாலனவை ரயில் கடவை ஊழியர்கள் இல்லாத கடவைகளில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்திலுள்ள ரயில் கடவைகளில் 7 ஆயிரத்து



500 ரூபா ஊதியத்திற்கு பொலிஸ் திணைக்களத்தால் தற்காலிக ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்த ஊதியம் அவர்களின் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்குப் போதாமையால் சிலர் கடமையிலிருந்து விலகியுள்ளார்கள்.

இப்படியான கடவைகளிலேயே இந்த கோர விபத்துக்கள் நடைபெற்று வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

சில கடவைகளில் சிவப்பு விளக்குகள் தொடர்ந்து எரிகின்றமையால் ரயில் வருகிறதா இல்லையாஎனதெரிந்துகொள்ள முடியாத நிலையில் இங்குள்ள பொது மக்கள் இருக்கிறார்கள்.

ஆகவே, சகல ரயில் கடவைகளிலும் சமிக்ஞை விளக்குகளுக்கு மேலதிகமாகக் கடவைக் காப்பாளர்களையும் பாதுகாப்புக்கு தடைகளையும் பொருத்தும்படியும், தற்காலிக அடிப்படையில் கடவைக் காப்பாளர்களாக கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களைக் கொண்டு இந்த வெற்றிடங்களை நிரப்பி உதவுமாறும் தங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-100)

## செஞ்சிலுவைச்சங்கத்தின் பயிற்சி வகுப்புக்கள் !

கிளிநொச்சி, ஓக. 18

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையால் ஆங்கிலம், சிங்களம் மற்றும் முதலுதவி அனர்த்த முகாமைத்துவம் ஆகிய அறிவு மற்றும் திறன்சார் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்டு பயிற்சி நெறியை முழுமையாக பூர்த்தி செய்யும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே, இந்தப் பயிற்சி வகுப்புக்களில் பங்கு கொள்ள ஆர்வம் கொண்டுள்ளவர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக்கிளை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் டெங்கு பரவும் அபாயம்: குப்பை பெருகியுள்ளது என மக்கள் விசனம்!

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சியில் டெங்கு பரவும் அபாயம் காணப்படும் பகுதிகள் நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாமல் குப்பைகள் பெருகிக் காணப்படுகின்றன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தொண்டமான்நகர் பகுதியிலிருந்து இரணைமடு சந்திவரையான ஏ-9 வீதியில் இவ்வாறு டெங்கு நுளம்பு பெருகக்கூடிய நிலையில் குப்பைகள் காணப்படுகின்றன என இந்தப் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவற்றை நீண்டகாலமாகக் கரைச்சி பிரதேசசபையினர் அகற்றவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், இதனை அண்டிய பகுதியில் அதிகளவான குடியிருப்புக்கள் காணப்படுகின்றமையால், கரைச்சி பிரதேச சபையினர் உடனடியாகச் செயற்பட்டு இந்தப் பகுதிகளை



சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## டெங்கு நுளம்பு அழிப்பு வடமாகாணத்தில் தீவிரம்!

வட மாகாணத்தில் டெங்கு பரவும் அபாயம் உள்ளது என சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்தமையை தொடர்ந்து இதற்கான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக டெங்கு நுளம்புகளை அழிக்கும் செயற்திட்டம் நேற்று முதல் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், கிளிநொச்சி நகர் பகுதிகளில் இராணுவத்தினர் நேற்று சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இந்தச் செயற்றிட்டத்தில் அனைத்துத் திணைக்களங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

(க)

## சட்டமூலம் நிறைவேற்றியபின் தேர்தலை ஒத்திவைக்க முடியாது கூட்டு எதிர்க்கட்சி டளஸ் எம்.பி.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரத்தை அரசு இழக்கும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும்.

அன்றைய தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்த, ஷிராந்தி திருமண வாழ்க்கை பற்றி கேள்வி எழுப்பிய குற்றப்புலனாய்வுப் பிரிவினர்!

## நாமல் ஆதங்கம்

கொழும்பு, ஓக. 18

எமது அம்மாவிடம் வாக்கு மூலம் பெறுகிறோம் எனக் கூறி அவர்களின் திருமண வாழ்க்கையைப் பற்றி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கேள்விகளைக் கேட்டுள்ளனர் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிரிலிய அமைப்பிற்கு வழங்கப்பட்ட டிபென்டர் வாகனத்தின் நிறம் மாற்றப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக யோஷித ராஜபக்ஷ நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 4 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளியே வரும் போது ஊடகவியலாளர்கள் நாமல் மற்றும் யோஷிதவிடம் கேள்விகளை எழுப்பினர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டிபென்டர் வாகனத்தின் நிறம் மாற்றப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எனது அம்மாவிடமும் விசாரணைகளை நடத்தியிருந்தனர். ஆனால், அங்கு கேட்கப்பட்ட கேள்விகள் வேறு.

மஹிந்தவை திருமணத்திற்கு முன் எப்போது சந்தித்தீர்கள்? மஹிந்தவை எவ்வாறு திருமணம் செய்தீர்கள்? தற்போது அவரைத் திருமணம் செய்துள்ளீர்களா? என்ற கேள்விகளை அவர்கள் அம்மாவிடம் கேட்டுள்ளனர்.

அவர்களது மூத்த மகனுக்கு 31 வயதாகிவிட்டது. ஆனால், தற்போதுதான் அவர்கள் திருமணம் செய்துள்ளார்களா? எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கேள்வி கேட்கின்றனர்.

இவ்வாறான கேள்விகளைக் கேட்கின்றமையால், இது ஓர் ஏமாற்று அரசியல் நாடகம் என்று தெளிவாகத் தெரிகின்றது. அரசின் இயலாமையை மறைப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(க)



# மராட்டியம் மாநிலம் மராத்வாடாவில் கடும் வறட்சி; எட்டு நாள்களில் 34 விவசாயிகள் தற்கொலை!





மராட்டியம் மாநிலம் மராத்வாடா பகுதியைச் சேர்ந்த மாவட்டங்களில் நிலவும் வறட்சி காரணமாக கடந்த 8 நாள்களில் மட்டும் 34 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மராட்டியம் மாநிலம் மராத்வாடா பகுதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரை எடுத்த கணக்கெடுப்பில் வறட்சி காரணமாக சுமார் 580 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர் என அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளது. அதே போல் கடந்த 8 நாள்களில் மட்டும் 34 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இது குறித்து அவுரங்காபாத் பகுதி ஆணையாளர் கூறுகையில்-

34 விவசாயி கள் கடந்த 8 நாள்களில் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால், அவர்கள் இறந்தமைக்கான காரணம் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், தற்கொலை செய்து கொண்ட 580 பேரில் 107 பேர் பீட் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அப்பகுதியில் போதிய மழையின்மையால் விவசாயம் மிகுந்த பாதிப்புக்குள்ளானது. அதனால் விவசாயிகள் அதிக அளவில் தற்கொலைசெய்துகொள்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகாராஷ்டிராவில் மொத்தம் 355 வட்டாரங்கள் உள்ளன. அவற்றில் 223 வட்டாரங்களில் கடந்த ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரை 75 சதவீதம் கூட மழை பொழிய வில்லை. கடந்த இரண்டு நாள்களாக மழை பெய்து வருகின்றது என மாவட்ட வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## குஜராத்தில் பன்றி காய்ச்சல்: 220 பேர் சாவு; 212 பேர் பாதிப்பு!




குஜராத்தில் பன்றி காய்ச்சலால் 220 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 212 பேர் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர் என மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் பன்றி காய்ச்சல் அதிகம் பேரைத் தாக்கி உள்ளது. குஜராத் மநிலத்தில்தான் இந்த நோய் பாதிப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இந்த ஆண்டில் 2095 பேர் பன்றி காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். இதில் 746 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். 1129 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்று வந்தவர்களில் 12 பேர் இறந்துள்ளனர். இதில் 6 பேர் அகமதாபாத்தை சேர்ந்தவர்கள். இந்த ஆண்டில் இதுவரை குஜராத்தில் பன்றி காய்ச்சலுக்கு இறந்தவர்களின் எண்ணிக்கை 220ஆக அதிகரித்துள்ளது எனத்தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அங்கு மேலும் 220 பேருக்கு பன்றி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அகமதாபாத்தில் 91 பேருக்கும், வதோராவில் 31 பேருக்கும், சூரத்தில் 15 பேருக்கும் இந்த நோய் அறிகுறி ஏற்பட்டுள்ளது.

இந்த தொற்றுநோய் பரவுவதை தடுக்க குஜராத் அரசு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமாநிலங்களில் தொடரும் கனமழை: உ.பியில் 33 பேர் சாவு!



வடமாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் மட்டும் 33 பேர் பலியாகியுள்ளனர் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய வடமாநிலங்களில் கனமழை பெய்து வருகின்றது. இதனால், இம்மாநிலங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இந்நிலையில், உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் மட்டும் மழை வெள்ளத்திற்கு இது வரை 33 பேர் உயிரிழந்துள்ளனர் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 300இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. 1,33,078 ஹெக்டேயர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 846 கோடி ரூபாய் எனவும் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளை அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் ஹெலிகாப்டர் மூலம் நேற்று பார்வையிட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளார்.

## ஆவணப்பட இயக்குநர் திவ்யபாரதி வழக்கை விசாரிகத் தடை



ஆவணப்பட இயக்குநர் திவ்யபாரதிக்கு எதிரான வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த ஆவணப்பட இயக்குநர் திவ்யா என்ற திவ்யபாரதி. இவர் மீது புதிய தமிழக கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் வழக்கறிஞர் பாஸ்கர் மதுரம் அளித்த புகாரின் பேரில் ஒத்தக் கடை பொலிஸார் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கை ரத்து செய்யவும், அது வரை விசாரணைக்கு தடை விதிக்கக் கோரியும் திவ்யபாரதி உயர்நீதிமன்ற மதுரைகிளையில் மனு தாக்கல் செய்தார். அதில், 'கக்கூஸ்' என்ற தலைப்பிலான எனது ஆவணப்படம் குறிப்பிட்ட ஒரு சமூகத்தை இழிவு படுத்தும் நோக்கத்துடனும், இரு சமூகங்களுக்கு இடையே கலவரத்தை தூண்டும் விதமாகவும் இருக்கின்றது எனப் புகார் கூறப்பட்டுள்ளது. என் மீதான புகார் தவறானது. நான் வழக்கறிஞர் படிப்பை முடித்து பதிவு செய்வதற்காகக் காத்திருக்கிறேன். கையால் மலம் அள்ளும் முறைக்கு எதிராக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். இப்பணியின்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க போராடி வருகிறேன்.

தவறான நோக்கத்தில் குறும்படத்தில் எதையும் பதிவு செய்யவில்லை.

எனவே வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பாரதிதாசன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் லஜபதிராய் வாதிட்டார். விசாரணைக்குப்பின், திவ்யபாரதி மீதான வழக்கை விசாரிக்க 4 வாரங்களுக்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## மும்பையில் தக்காளி திருடிய ஆசாமி கைது!



மராட்டிய மாநிலத்தில் உள்ள தஹிசார் சந்தையில் தக்காளி திருடிய ஆசாமியை பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்தியாவின் சில மாநிலங்களில் கடந்த மாதம் தக்காளி விலை தாறுமாறாக ஏறியது. ஒரு கிலோ தக்காளி 120 ரூபாய் வரை விற்பனை ஆனது.

தக்காளி விலையைக் குறைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இதற்கிடையே, மும்பை தஹிசார் பகுதியில் உள்ள சந்தையில் சுமார் 700 கிலோ அளவுக்கு தக்காளி மாயமாகி போனது. இது தொடர்பான புகாரின் பேரில் தஹிசார் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தக்காளியை திருடிய கும்பலை வலை வீசித் தேடி வந்தனர்.

இந்நிலையில், தக்காளி திருடிய ஆசாமியை பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக பொலீஸார் கூறுகையில், 'தஹிசார் சந்தையில் உள்ள சி.சி. டி.வி. கமரா பதிவுகளை ஆராய்ந்து பார்த்தோம். அதில் குர்லா பகுதியை சேர்ந்த ராதேஷ்யாம் குப்தா (54)என்பவர் மார்க்கெட்டில் இருந்து தக்காளி திருடுகின்றமை தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து அவரைக் கைது செய்துள்ளோம். மேலும், இதில் தொடர்புடைய பலரை தேடி வருகிறோம்.- என்று தெரிவித்துள்ளனர்.

# வெனிசுலா சிறைக் கலவரம்; 37 கைதிகள் படுகொலை



வெனிசுலா நாட்டில் உள்ள சிறையில் இருதரப்பினருக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் 37 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

வெனிசுலா நாட்டில் உள்ள அமாசான்ட்ஸ் மாகாணத்தில் போர்ட்டோ அயாகுஜோ என்ற சிறிய நகரம் உள்ளது. அங்கு சிறை ஒன்று செயற்பட்டு வருகின்றது.

இந்தச் சிறையில் 107 பேர் அடைக்கப்பட்டு இருந்தனர். இவர்களில் பலர் கொலை உள்ளிட்ட கொடூர குற்றச் செயல்களைச் செய்தவர்கள்.

சிறைக் கைதிகள் 2 பிரிவு களாக ஏற்கனவே செயற்பட்டு வந்துள்ளனர். இதனால், அவர்க ளுக்குள் அடிக்கடி மோதல் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரு தரப்பினரும் பயங்கரமாக மோதிக்கொண்ட னர். துப்பாக்கியாலும் சுட்டனர்.

இதில் 37 பேர் கொல்லப்பட்ட னர். கலவரத்தை அடக்க சிறை அதிகாரிகள் முயற்சி செய்தனர். அவர்களையும் கைதிகள் தாக் கினார்கள். இதில் 14 சிறை அதி காரிகள் படுகாயம் அடைந்தனர்.

கைதிகளுக்கு எப்படி துப் பாக்கி கிடைத்தது என்பது தெரியவில்லை. சிறைக் காவ லர்களின் துப்பாக்கிகளைப் பறித்து தாக்குதல் நடத்தி இருக்கலாம் என்று கருதப்படு கின்றது. இதுபற்றி முழு விவ ரங்கள் இதுவரை வெளியிடப் படவில்லை.

# உலோகத்துக்கு பதிலாக மரக்கட்டை கார் ஜப்பான் நிறுவனங்களின் திட்டம்



எஃகு உலோகத்துக்குப் பதிலாக மரக்கட்டை மூலம் கார் தயாரிக்க ஜப்பான் நிறு வனங்கள் திட்டமிட்டுள்ளன.

தற்போது கார்கள் 'ஸ்டீல்' எனப்படும் எஃகு உலோக பொருள்கள் மூலம் தயாரிக்கப் படுகின்றன. அதனால் கார்கள் அதிக எடையுடன் உள்ளன.

அதன் எடையை குறைப் பதற்காக மரக்கட்டைகள் மூலம் கார் தயாரிக்க ஜப்பான் நிறு வனங்கள் திட்டமிட்டுள்ளன. மரத்தில் உள்ள 'பைபர்' எனப் படும் நாரிழைகள் மூலம் கார் தயாரிக்கப் பயன்படும் உலோக கலவை உருவாக்கப்பட உள் ளது. அது எக்கு (ஸ்டீல்) உலோ கத்தை விட 5 இல் ஒரு பங்கு எடை மட்டுமே கொண்டது.

அதன் எடை மிகவும் குறைவு, அதே நேரத்தில் 5 மடங்கு பலம் வாய்ந்தது. அதற்கான ஆய்வை ஜப்பானின் கியோடோ பல்கலைக்கழக நிபுணர்கள் மேற் கொண்டுள்ளனர். அதை ஜப்பானின் டென்கோ கார்ப்பரே சன், டொயோட்டோ, டய்க்கோ நிஷிகவா கார்ப்பரேசன் உள் ளிட்ட நிறுவனங்கள் பயன் படுத்திக் கொள்ள உள்ளன.

மரக்கட்டைகள் மூலம் உதிரி பாகங்கள் தயாரிக்கும் பணி வருகிற 2020ஆம் ஆண்டுக்குள் முடியும் என நிபுணர்கள் தெரி வித்துள்ளனர்.

# சியரா லியோன் நிலச்சரிவு சாவு எண்ணிக்கை 400 ஆனது!



சியரா லியோனில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 300 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் பலி எண்ணிக்கை 400 ஆக உயர்ந்துள்ளது.


ஆபிரிக்க நாடான சியரா லியோன் நாட்டில் பெய்து வந்த பலத்த மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட் டுள்ளது. தலைநகர் பிரிடவுன் வெள்ளத்தில் மூழ்கி உள்ளது. அங்குள்ள ரெஜன்ட் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் இடிபாடு களில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 400 ஆக உயர்ந்து விட்டது. இன்னும் 600 பேரை காணவில்லை. இடிபாடுகளுக்கு இடையே அவர்களைத் தேடும் பணி நடந்து வருகின்றது.

அந்த நாட்டின் அதிபர் எர்னஸ்ட் பாய் கொரோமா, ஒட்டுமொத்த சமூகமும் அழிந்து விட்டது என மிகுந்த வேதனையுடன் கூறினார். உலக நாடுகளின் அவசர உதவியை அவர் கோரி உள்ளார்.

அதிபர் மாளிகை செய்தி தொடர்பாளர் அப்துலாய் பாராய் டாய், பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில், இடிபாடுகளுக்குள் இன்னும் பலரது உடல்கள் சிக் கியுள்ளன, அவற்றை மீட்டெ டுக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது, ஒட்டுமொத்த நாடும் இப்போது துயரத்தில் உள்ளது என்று கூறினார்.

அங்குள்ள ஐ.நா. குழுவினர் ஒன்றுகூடி, நிவாரணப்பணி களில் உதவி வருகின்றனர் என ஐ.நா. சபை கூறியுள்ளது.

# ஹஜ் யாத்ரீகர்களுக்காக கட்டார் எல்லை திறப்பு சவூதி அரேபிய மன்னர் முடிவு



கட்டாரைச் சேர்ந்த ஹஜ் புனித யாத்ரீகர்களுக்காக அந்நாட்டுடனான எல்லையை மீண்டும் திறக்க சவூதி அரேபிய மன்னர் சல்மான் முடிவு செய் துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாத இயக்கங்களுக்கு உதவி செய்வதாக கூறி கட்டார் உடனான தூதரக உறவை முறித்துக்கொள்வதாக சவூதி அரேபியா, ஐக்கிய அமீரகம், எகிப்து, பஹ்ரைன், ஏமன் உள்ளிட்ட 6 அரேபிய நாடுகள் கடந்த ஜூன் மாதம் அறிவித் திருந்தன. வளைகுடா நாடு களுக்கிடையே இந்த விவகாரம் இன்னும் தீராத நிலையில், குவைத், ஈரான், துருக்கி உள் ளிட்ட நாடுகள் கட்டாருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தன.

சவூதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியர்களின் புனித ஸ்தலமான மெக்கா, மதீனா வுக்கு ஆண்டு தோறும் கட்டாரி லிருந்து யாத்ரீகர்கள் வருகின் றமை வழக்கமான ஒன்று. தற் போது, இருநாடுகளுக்கிடையே உள்ள பிளவால் கட்டார் யாத் ரீகர்களை சவூதி அனுமதிக்குமா என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், கட்டாரைச் சேர்ந்த ஹஜ் யாத்ரீகளுக்காக அந்நாட்டுடனான எல்லையை திறக்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ளார் என சவூதி அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. மேலும், கட்டார் தலைநகர் டோஹாவிலிருந்து விமானங்கள் மூலம் யாத்ரீகர் களை அனுமதிக்கவும் சவூதி முடிவு செய்துள்ளது.

முன்னதாக, தங்களது நாடு களைச் சேர்ந்த யாத்ரீகர்களுக்கு தேவையான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கட்டார் கோரிக்கை விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# வரி ஏய்ப்பு வழக்கு சிக்கிய உலக அழகி



சொகுசு கார் இறக்குமதி செய்ததில் வரி ஏய்ப்பு செய் தார் எனத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராவார் என நடிகை சுஷ் மிதாசென் உறுதியளித்துள்ளார்.

முன்னாள் பிரபஞ்ச அழ கியும், நடிகையுமான சுஷ்மிதா சென் கடந்த 2005ஆம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து இறக் குமதி செய்யப்பட்ட லேண்ட் - க்ரூஸர் காரை 55 லட்சரூபா கொடுத்து வாங்கியுள்ளார்.

ஆனால் அந்த கார் 2004ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது எனக் கூறி இறக்குமதி செய்து, வரி ஏய்ப்பு செய்திருப்பதை சுங்கத் துறையினர் கண்டு பிடித்தனர்.

இதனை அடுத்து அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணைகள் நடத்தி வருகின் றனர்.

# திருவிழா கூட்டம் மீது விழுந்த ராட்சத மரம்: 13 பேர் பலி

போர்த்துகல் நாட்டில் நடைபெற்ற திருவிழா கூட்டம் மீது ராட்சத மரம் ஒன்று சாய்ந்து வீழ்ந்த விபத்தில் குழந்தைகள் உள்பட 13 பேர் பலியாகியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் உள்ளூர் திருவிழா ஒன்றில் அருகில் இருந்த ராட்சத மரம் ஒன்று திடீரென கூட்டத்தினர் மீது விழுந் துள்ளது.

துரதிஷ்டவசமாக இவ்விபத்தில் இரண்டு குழந்தைகள் உள்பட 13 பேர் பலியாகினர் படுகாயம் அடைந்த 49 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பிலிப்பைன்ஸில் 32 பேரைக் கொன்ற பொலிஸ்: போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக அதிரடி



பிலிப்பைன்ஸில் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கையில், ஒரே நாள் இரவில் 32 பேரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டு வரு கின்றது. அவ்வகையில், போதைப்பொருள் கடத்தல் காரர்களை ஒடுக்குவதற்கு திங்கட்கிழமை இரவு தொடங் கிப் பொலிஸார் பல்வேறு இடங் களில் அதிரடிச் சோதனை நடவடிக்கைகளை நடத்தினர். புலக்கான் மாகாணத்தில் நடந்த இந்தச் சோதனைகளின் போது போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 32 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதுபற்றி பொலிஸ் அதிகாரி ரோமியோ காராமட் ஜூனியர் கூறும்போது,

சுபுலக்கான் மாகாணத்தில் பல்வேறு இடங்களில் 67 அதி ரடி நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன.

இதில் 32 பேர் கொல் லப்பட்டனர். 109 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

# 2019 உலகக் கிண்ணம் அதுவரை நான் பதவி விலகமாட்டேன்

## திலங்க சுமதிபால



இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக அடைந்து வரும் மோசமான தோல்விகளுக்காக தான் பதவி விலகுவதற்கான எந்த எண்ணமும் இல்லை என இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் தற்போதைய மோசமான நிலைமைக்கு இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகமே காரணம் என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பெற்றோலியத்துறை அமைச்சருமான அர்ஜூன ரணதுங்க குற்றஞ் சாட்டி 24 மணி நேரத்துக்குப் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே திலங்க சுமதிபால இக்கருத்தை முன்வைத்தார்.

அர்ஜூன ரணதுங்க மேலும் குறிப்பிடுகையில்–

இலங்கை அணி மிக மோசமான கால கட்டத்தில் பயணிக்கின்றது. தோல்விகளுக்காக வீரர்களை மாத்திரம் குறை கூற முடியாது, இலங்கை அணியின் கட்டுக்கோப்பு சீரழிந்துள்ளது. இதற்குக் காரணம் இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாக சீர்கேடேயாகும். இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்தார். இலங்கை அணி இந்திய அணியிடம் டெஸ்ட் தொடரை 3:0 என தோல்வியடைந்ததை அடுத்தே கடந்த செவ்வாய்க் கிழமை ரணதுங்கவினால் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

அர்ஜூன ரணதுங்கவின் கருத்துக்கு திலங்க சுமதிபால நேரடியாக பதிலளிக்கவில்லை என்பதுடன், சர்வதேச கிரிக்கெட் சபையில் ஏதும் பதவியைப் பெறும் எண்ணம் உண்டா? என ஊடகவியலாளர்களால் வினவப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே திலங்க சுமதிபால அக் கருத்துக்கு பதிலளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

சுமதிபால மேலும் தெரிவிக்கையில்–

என்னால் இப்ப தவியில் அடுத்த வருடம் வரை இருக்க முடியும் (அடுத்த தேர்தல் வரும் வரை). அதன் பின்னர் மேலும் 3 வருடங்கள் வரை இருக்க முடியும். சர்வதேச கிரிக்கெட் சபையில் பதவியை பெறும் எந்த எண்ணமும் எனக்கு கிடையாது. எனது அனுபவம் மற்றும் மூத்த உறுப்பினர் என்ற வகையில், சர்வ தேசகிரிக்கெட் சபை கலந்துரையாடல்களில் எனது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அவர்கள் எதிர்பார்த்தமையோடு சர்வதேசகிரிக்கெட் சபையில் உயரிய பதவி ஒன்றை எனக்கு வழங்கவும் ஆலோசித்தனர். எக்காரணம் கொண்டும் எனது பொறுப்புகளி லிருந்தும் இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்தும் 2019 உலகக் கிண்ணம் வரை பதவி விலகமாட்டேன் என நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

திலங்க சுமதிபால இலங்கை நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் என்பதுடன் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவருக்கான தேர்தலில் அர்ஜூன ரண துங்க மற்றும் அவரது சகோதரர் நிஸாந்த ரணதுங்க ஆகியோரைத் தோற்கடித்து தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திலங்க சுமதிபாலவின் பதவிக்காலத்திலேயே இலங்கை அணி அடிமட்ட நிலைக்கு சென்றது என்பதுடன் ஊழல், ஆட்டநிர்ணய குற்றச்சாட்டுக்கள், முக்கியமான உறுப்பினர்களின் பதவி விலகல்கள் மற்றும் வீரர்கள் தேர்வில் முரண்பாடு போன்றன ஏற்பட்டனஎன்பதும்குறிப்பிடத்தக்கது.

## குழந்தை பிறந்தவுடன் களமிறங்குவார்

### செரீனா வில்லியம்ஸ்



குழந்தை பிறந்தபின்னர் 3 மாத ஓய்வுக்குப் பிறகு ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்ஸில் களமிறங்கி பட்டத்தை தக்கவைத்துக் கொள்ளப் போகின்றேன் என செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் மகப் பேற்றுக்குத்தயாராகியுள்ளார் டென்னிஸ் நாயகி செரீனா வில்லியம்ஸ்.இந்நிலையில் அவர் ரசிகர்களுக்கு அளித்துள்ள பேட்டியில், இந்த கர்ப்பம் எனக்கு அதிக சக்தியை கொடுத்துள்ளது. அதனால், அந்த சக்தியுடனே பயணம் செய்ய முடிவு செய்துவிட்டேன்.

இதுஒருமூர்க்கத்தனமான திட்டம் என்று எனக்குத் தெரியும். ஆனால், என்னிடம் சக்தி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# துணைத் தலைவர் பதவி மிகப் பெரிய கௌரவம்:

### ரோஹித் சர்மா நெகிழ்ச்சி



இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் பதவி தந்தமை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன் என ரோஹித்சர்மா நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி, இலங்கையுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் மற்றும் ஒரு ரி-20 போட்டி கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணி, இலங்கை அணியை 3:0 என்ற கணக்கில் வெள்ளையடித்து அசத்தியது.

இதற்கிடையே, இலங்கை அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரின் துணைத் தலைவராக ரோஹித் சர்மாவை நியமனம் செய்து இந்திய கிரிக்கெட் சபை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.


இதுகுறித்து ரோஹித் சர்மா செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:

முதலில், இந்திய அணியின் துணைத் தலைவர் பதவி எனக்கு அளிக்கப்பட்டமையை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகின்றேன்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர், இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என மட்டுமே நினைத்தேன். ஆனால் துணை கப்டன் பதவி அளிக்கப்பட்டமையை நினைத்து மிகச் சந்தோஷமடைகின்றேன்.

நாளைமறுதினம் முதல் ஒரு நாள் போட்டி தொடங்க உள்ளது. இந்நிலையில், எனக்கு கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பை நிச்சயம் பயன்படுத்திக் கொள்வேன். அந்தப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதே எனது ஆசை. இதனால், அந்தப் போட்டியை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. இப்போதைக்கு எனது மகிழ்ச்சியான இந்த தருணத்தை அனுபவித்து வருகிறேன். என்றுதெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் வாழ்க்கையே முடிவுக்கு வந்து விடும்: ஆஸ்திரேலிய வீரருக்கு ஏற்பட்ட நிலை



தனக்கு இன்னொரு முறை தோள் பட்டையில் காயம் ஏற்பட்டால், கிரிக்கெட் வாழ்க்கையே முடிவுக்கு வந்துவிடும் என்று ஆஸ்திரேலிய அணியின் கிறிஸ் லின் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த கிறிஸ்லின் தனது மாநில கிரிக்கெட் சபையான மேற்கு ஆஸ்திரேலிய அணிக்கு விளையாடி வருகிறார்.

இந்நிலையில் அவரை அந் நிர்வாகம் ஒப்பந்தத்தில் இருந்து நீக்கியுள்ளது. ஏனெனில் அவர் கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய முதல் தர போட்டியான செப் பீல்டு ஷீல்டு போட்டியில் மொத்தம் 6 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.

கடந்த 2013இல் இருந்து உள்ளூர் ஒரு நாள் போட்டியில் விளையாடவே இல்லை. எங்களுக்கு அணியை பலப்படுத்தி முதல்தரபோட்டிகளில் தொடர்ச்சியாக விளையாடும் வீரரே தேவை என அந்த நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவர் கூறுகை யில்–

ஏமாற்றமாக தான் இருக்கிறது ஆனால், சரியாகத் தான் நடக்கும். சில தொடர்களில் விளையாட வேண்டும்.

அடுத்த 12 மாதத்திற்கு உடல்நல தகுதியோடு இருக்க வேண்டும். நான் காயத்தில் இருந்து மீண்டு, மீண்டும் கிரிக்கெட் விளையாட வேண்டும். ஆனால், என்னுடையதுடுப்பாட்ட முறையை நான் மாற்ற மாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

பல முறை தோள் பட்டை காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் அவர், இன்னொரு முறை தோள் பட்டையில் காயம் ஏற்பட்டால், தனது கிரிக்கெட் வாழ்க்கையே முடிவுக்கு வந்துவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# உலகப் புகழ்பெற்ற உதைபந்து தொடர்: முதன்முறையாகப் பெண் நடுவர்



ஐரோப்பிய உதைபந்து தொடரின் முதல் பெண் நடுவராக பணியாற்ற உள்ளார் பிபியானா ஸ்டைன்ஹாஸ்.

ஜேர்மனியைச் சேர்ந்த 39 வயதாகும் பிபியானா ஸ்டைன் ஹாஸ் பொலிஸ் அதிகாரியாக பணியாற்றி வருகின்றார்.

உள்நாட்டுப் போட்டிகளில் உதைபந்து நடுவராக கலக்கி வரும் பிபியானா, முதன் முறையாக ஐரோப்பிய உதைபந்து தொடர்களில் ஒன்றான Bundesliga தொடரின் பெண் நடுவராக பணியாற்ற உள்ளார்.

இதுகுறித்து பிபியானா கூறுகையில், எனது கனவு நிறைவேறிவிட்டது என் முன்னால் உள்ள சவால்களை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன். மக்களும், ஊடகங்களும் என்னை உற்றுநோக்குகின்றமையால் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவேன்– எனத் தெரிவித்துள்ளார்.

இவருக்கும் உலகின் முன்னணி வீரர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை மாற்ற முடியாது: விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி திட்டவட்டம்

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை மாற்றுவது என்பது அடிப்படையற்றது. கடந்த எட்டு வருடங்களாக இலங்கையில் இடைக்கால நிர்வாக சபையே காணப்பட்டது. நான் வந்த பின்னர் தான் தேர்தல் நடத்தி ஒருவரைத் தெரிவு செய்தேன். அந்த தேர்தலில் அர்ஜுன ரணதுங்க போட்டியிட்டார். அதில் அவர் தோல்வியடைந்துவிட்டார். இனி மீண்டும் இடைக்கால நிர்வாக சபைக்கு எம்மால் செல்ல முடியாது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் நிர்வாக சபையின் நிர்வாக மற்றும் தொழிற்பாட்டுப் பதவிகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படுகின்றமை தொடர்பில் நான் சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து அறிக்கை கோரியிருக்கின்றேன். அதுமட்டுமன்றி கிரிக்கெட் வீரர்களுக்கான வசதிகள் மற்றும் தெரிவு முறைகள் தொடர்பிலும் அறிக்கை கோரியுள்ளேன்.- என்றும் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட்டுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நான் என்ன செய்ய முடியும்? எனது தலையீட்டுக்கு ஒரு வரையறை இருக்கிறது. அதனைத் தாண்டி நான் இவற்றில் தலையிட மாட்டேன். எவ்வாறெனினும் இந்தியாவுடனான ஒரு நாள் தொடரின் பின்னர் எமது கிரிக்கெட் வீரர்களைச் சந்தித்து பேச்சு நடத்த எண்ணியிருக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், எமது நாட்டின் கிரிக்கெட் தொடர்பில் நான் ஆராய்ந்து பார்க்கவுள்ளேன். வீரர்களுக்கான வசதிகள் மற்றும் தெரிவுகள் தொடர்பில் அதிகாரிகளிடம் அறிக்கை கேட்டிருக்கின்றேன். துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், டெஸ்ட் போட்டிகளுக்கு இதனைவிட ஒரு சிறந்த குழாமை நாம் தெரிவு செய்ய முடியாது. எனினும் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய வேண்டும். எனினும், நாம் பதற்றமடைய வேண்டியதில்லை. மருத்துவர்களைக் கொண்டு ஆலோசனைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. விளையாட்டில் தோல்விகள், வெற்றிகள் வரலாம், போகலாம். ஆனால் தற்போது நாம் பாரியதொரு பின்னடைவுக்குச் சென்றுவிட்டோம். இந்த இடத்தில் ஏனைய விடயங்களையும் நாம் பார்க்க வேண்டும். இந்திய அணி மிகவும் திறமையான வீரர்களைக் கொண்டது. ஆஸ்திரேலியாவின் காலநிலையுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் காலநிலை இந்திய வீரர்களுக்கு பெரும் சாதகநிலையைக் கொண்டதாக உள்ளது. எனவே, அவர்கள் தமது திறமையை நன்றாகவெளிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பின்னடைவுக்கு நிர்வாகத்தை மாற்றவேண்டும் என்ற கோரிக்கை அடிப்படை



யற்றது.

அத்துடன், ஏதாவது யோசனைகள் இருந்தால் கூறுங்கள். வீரர்களில் மாற்றங்கள் செய்வதற்கு நியாயமானகாரணங்கள் இருந்தால் கூறுங்கள். நான் அதனை செவிமடுக்கத்தயாராக இருக்கின்றேன். இந்த அணியை பலப்படுத்தி முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதில் முன்னாள் அணித்தலைவர்கள் அனைவரும் உறுதியாக இருக்கின்றனர்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கிரிக்கெட்டில் காட்டிக்கொடுப்பு மற்றும் சூதாட்டம் அதிகரிப்பு!



இலங்கைக் கிரிக்கெட்டில் காட்டிக்கொடுப்பு மற்றும் சூதாட்டம் அதிகரித்துள்ளன என முன்னாள் இலங்கை அணித்தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அர்ஜுனதுங்க இலங்கை கிரிக்கெட் சம்பந்தமாக தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் அரசு 24 மணி நேரத்திற்குள் மக்களுக்கும் தெளிவூட்ட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள ஸ்ரீவஜிராஷ்ம பௌத்த நிலையத் தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்- இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அது மிகவும் பாரதூரமான அறிவித்தலாகும். இலங்கை கிரிக்கெட் துறை இக்கட்டான நிலையை அடைந் துள்ளது. கிரிக்கெட்சபையின்முறையற்ற செயற்பாடுகளினால் அத்துறையை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளள. காட்டிக்கொடுப்பு மற்றும் சூதாட்டம் என்பன இலங்கை கிரிக்கெட்டில் அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்தப் பாரதூரமான அறிவித்தல் தொடர்பில் 24 மணி நேரத்தில் அரசு மக்களுக்கு தெளிவூட்ட வேண்டும். விளையாட்டுத்துறைஅமைச்சர் அல்லது கிரிக் கெட் சபையின் தலைவருக்கு அப்பொறுப்பு உள்ளது.

எனவே இது விட யத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

இல்லாவிடத்து நாட்டின் கிரிக்கெட் துறை மேலும் வீழ்ச்சியடையும் என்பதுடன் கிரிக்கெட் சபை மீதுள்ள நம்பிக்கையும் இல்லாதுபோகும். ஆகவே அரசு இது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டுவதுடன் உரிய விசாரணைகளை நடத்தி கிரிக்கெட் துறையிலுள்ள மோசடிகளைக் களைந்து அத்துறையை கட்டியெழுப்ப வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார்.

# பௌன்ஸர் பந்து தாக்கி பாக். வீரர் மரணம்



போட்டியின்போதுபௌன்ஸர் பந்தொன்று தாக்கி பாகிஸ்தான்நாட்டுகிரிக்கெட் துடுப்பாட்ட வீரர் சுபைர் அஹமட் மரணித்திருக்கின்றமை கிரிக்கெட் உலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

சுபைர் அஹமட் தனது சொந்த ஊரில் குவெட்டா பீயர்ஸ் அணிக்காக 'A' நிலை மற்றும் 'T'-20 போட்டிகளில் ஆடி வந்தார். அந்தக் கழகத்திற்காக ஓகஸ்ட் 14 ஆம் திகதி நடந்த போட்டியின் போதே பந்து அவரது தலையைத் தாக்கியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்தப் பரிதாபச் செய்தியைதனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்டுள்ளது. இந்த தகவல் உலகெங்கும் உள்ள விளையாட்டு ரசிகர்களை பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

முன்னாள் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் பிலிப் ஹியூஸ்சிட்னிமைதானத்தில் ஷெபில்ட் ஷீல்ட் போட்டியின்போது பந்து தாக்கி மரணித்த சம்பவம் நிகழ்ந்து மூன்று ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே இந்த பரிதாபம் மீண்டும் இடம்பெற்றுள்ளது. ஹியூஸின் மரணத்தை அடுத்து விளையாட்டின் பாதுகாப்பு விதிகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் டார்வினில் நடந்த பயிற்சிப் போட்டியின்போது ஜோஷ் ஹேசில்வுட் டின் பௌன்ஸர் பந்தால் தாக்கப்பட்டு சில மணி நேரங்களுக்குள்ளேயே சுபைரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

குவெட்டாபீயர்ஸ்அணிக்காக சுபைர் அஹமட் ஆடிய நான்கு போட்டிகளில், 2014 ஆம் ஆண்டு நடந்த 'T'-20 ஆட்டம் ஒன்றில் அவர் ஆட்டமிழக்காது 111 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. பந்து தாக்கிய போது அவர் தலைக்கவசம் (Helmet) அணிந்திருந்தாரா, இல் லையா என்பது உடன் உறுதி செய்யப்படவில்லை.

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் டோனி, டுபாயைச் சேர்ந்த பசிபிக்ஸ்போர்ட்ஸ்கிளப்புடன்இணைந்து கிரிக்கெட் அக்கடமியை அந் நாட்டில் தொடங்க இருக்கிறார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய ஒரு நாள் அணியின் விக்கெட் காப்பாளராகவும் உள்ள மகேந்திர சிங் டோனி டுபாயைச் சேர்ந்த பசிபிக் ஸ்போர்ட்ஸ் கிளப் புடன் இணைந்து அந்நாட்டின் எம்.எஸ்.டோனி



# டுபாயில் கிரிக்கெட் அக்கடமி : தொடங்குகிறார் டோனி

என்ற பெயரில் கிரிக்கெட் அக்கடமி தொடங்க இருக்கின்றார்.

படிப்படியாக இந்தக் கிரிக்கெட் அக்கடமியை ஐக்கிய அரபு அமீரகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் தொடங்க அவர்திட்டமிட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷேவாக், சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், நடுவரைத் துடுப்பாட்ட வீரர் யுவராஜ்சிங் ஆகியோர் கிரிக்கெட் அக்கடமியை நடத்தி வருகிறார்கள். அந்த வரிசையில் டோனியும் சேர இருக்கிறார்.

மற்ற வீரர்கள் அனைவரும் இந்தியாவில் கிரிக்கெட் அக்கடமியைத் தொடங்கி இருக்கின்றார்கள். ஆனால், டோனி வெளிநாட்டில் தொடங்க உள்ளார். கிரிக்கெட் அக்கடமி தொடங்குவது சம்பந்தமான பணிகளை மேற்கொள்ள அடுத்த மாதம் டோனி டுபாய் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.கே.சிவஞானம் நேற்று சபையில் தெரிவித்தார்.

திலீபனின் நினைவு தினம் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி முடிவடையும் நிலையில், அதற்கு முன்பாக நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாநகர ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நல்லூரில் திலீபனின் நினைவுத் தூபி மீண்டும் எழுவதற்கு வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் சிவஞானம் கோரினார்.

வடக்கு மாகாண சபையின் 102 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றபோது, அந்த அமர்விலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளராகத் தாம் இருந்தபோது திலீபனின் நினைவுத் தூபியை அமைத்துத் திறந்து வைத்தார் என்பதை பெருமையுடன் நினைவுபடுத்திய சிவஞானம், அதற்காக தன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் கூறினார்.

இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட தியாகி திலீபன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவராக இருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அவர், இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில், 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நல்லூரில் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து அந்தக் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், 1987 செப்டெம்பர் 26 ஆம் திகதி உயிரிழந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## பொலிஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார், தற்போது தங்கள் மீது வாள்வெட்டு இடம் பெற்ற பின்னரே அக்குழுவினரைக் கைது செய்துள்ளனர். அப்படியாயின் இதுவரை அவர்கள் அமைதியாக இருந்தமை ஏன்?'

– இவ்வாறு நேற்றுக் கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன். மாகாண சபையின் விசேட அமர்வில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் பொலிஸாரின் செயற்பாடு திருப்தியளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தங்களுக்குப் பாதிப்பு என வரும்போது களத்தில் இறங்கி நடவடிக்கை எடுப்பதைப் போல பொதுமக்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ் அரசியல்வாதிகள் விடயத்திலும் சுகிர்தன் கடுப்புடன் கருத்துக் கூறினார், அதாவது, ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பாகக் கருத்துக் கூறக் கூடாது எனக் கோருகின்ற அரசியல்வாதிகளான நாங்களும் உண்மைக்குப் புறம்பாக கதைக்கக்கூடாது. – என்று தெரிவித்தார் அவர். (ம)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து வழிபாடு ஒன்றை நடத்தி இந்த நடை பயணத்தை ஆரம்பித்து வைப்பர்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகும் நடைபயணம் முதலில் மடுமாதா கோவிலை நோக்கிச் சென்று பின்னர் அங்கிருந்து கொழும்பு நோக்கி முன்னேறும்.

இந்த நடைபயணம் கொழும்பில் ஜனாதிபதி மாளிகை வரை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மத்தள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வந்துள்ளது.

இக்குழு இன்று காலை 10 மணிக்கு கொழும்பில் சிவில் சேவைகள் அமைச்சில் இடம் பெறும் கலந்துரையாடலில் இது பற்றிப் பேசும்.

(விரிவான செய்திகள் 5 ஆம் பக்கத்தில்)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரதும் நாட்டினதும் துரதிர்ஷ்டம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடத்துவது, வடக்கு, கிழக்கிற்கான ஆளுநர்களாக இராணுவத்தினரை நியமிப்பதில்லை, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பான பிரச்சினைகளை மீளாய்வு செய்ய ஆணைக் குழுவை நியமிப்பது போன்ற அறிவிப்புகளை வெளியிடுமாறு இந்தியப் புலனாய்வுப் பிரிவு யோசனைகளை முன்வைத்திருந்தது.

இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளாதமை தவறு என்பதை மஹிந்த ராஜபக்ஷ பின்னர் உணர்ந்து கொண்டார். இந்தியா, இலங்கையுடன் இருந்திருந்தால், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எதிராக மோசமான எந்தப் பிரேரணையையும் கொண்டு வந்திருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் நேற்று சபையில் கோரிக்கை விடுத்தார்.

முன்னர் இருந்த அமைச்சர்களை நீக்கம் செய்தமையாலேயே தற்போது வடக்கு மாகாண சபையில் பிரச்சினைகள் எழுந்துள்ளன எனச் சுட்டிக்காட்டிய சிவயோகன், அவர்களை மீண்டும் அதே அமைச்சர்களாக நியமித்தால் மாகாண சபையின் செயற்பாடுகள் சுமுகமாக இடம் பெறும் எனவும் கூறினார்.

வடமாகாண சபையினூடாக தமிழ் மக்களுக்கு இன்னும் பல சேவைகள் ஆற்றவேண்டி இருக்கின்றன எனக் கூறிய சிவயோகன், முன்னைய அமைச்சர்களை மீளவும் நியமிப்பதன் மூலம் அந்தச் செயற்பாடுகளை நேர்த்தியாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை அமைச்சர்களாக இருந்த த.குருகுலராசா, பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம் ஆகியோர் அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளனர் என்பதும் அமைச்சர் டெனீஸ்வரன் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய மாட்டார் எனக் கூறி தொடர்ந்தும் அப்பதவியில் இருந்து வருகின்றமையும் தெரிந்ததே. (ம)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 102 ஆவது அமர்வு நேற்றுக் காலை மாகாண சபையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம்–

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாண மக்கள் தற்போது குடிதண்ணீரைப் பெறுவதில் பல சவால் களை எதிர்நோக்கியிருக்கின்றனர். இந்நிலையில், கிளிநொச்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாண மக்களுக்கு குடிதண்ணீர் தரமாட்டார் எனக் கூறுகின்றார்.

அதேபோன்று வடமராட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மருதங்கேணியிலிருந்து யாழ்.மக்களுக்கு குடிதண்ணீர் தரமாட்டார் எனக் கூறுகின்றார்.

இவர்கள் இப்படி செயற்பட்டால் மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு மாற்றுத்திட்டம் என்ன?

வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து வந்து மாகாண நீர் கொள்கை ஒன்றை உருவாக்கியிருந்தீர்கள். அந்தக் கொள்கை எங்கே எனவும் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரின் கேள்விக்கு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பதிலளிக்கையில், இந்த விடயம் தொடர்பாக அடுத்த அமர்வில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

தொடர்ந்தும் கருத்துக் கூறிய எம்.கே.சிவாஜிலிங்கம், நெடுந்தீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றமை மட்டுமன்றி கால்நடைகளும் உயிரிழக்கின்றன. நெடுந்தீவு பகுதியில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் ஒன்று உள்ளது. அதனை விரிவாக்க வேண்டும் என அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். – என்றார்.

அந்தத் திட்டம் காரணமாக நெடுந்தீவுப் பகுதியில் பாதிப்பு ஏதும் ஏற்படபோவதில்லை. மீன்களும் இறக்கப்போவதில்லை. நெடுந்தீவில் அவ்வாறான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முடியுமாக இருந்தால், மருதங்கேணியில் ஏன் அவ்வாறான திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது?

எனவே, சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஆராய விரைவில் சபையின் விசேட அமர்வு ஒன்றை நடத்த வேண்டும்.– எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ம)

## 3 பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் த சில்வா, சுகாதார சேவை பணிப்பாளர் ஜயசுந்தர பண்டார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கூடிய விரைவில் வயம்ப மருத்துவ பீடத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையோடு வடமேல் மாகாண சபைக்கு உட்பட்ட குளியாப்பிட்டிய ஆரம்ப வைத்தியசாலையையும் அரசின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

## தன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாகச் சூடாகி சிறிது நேரம் அமளி துமளிப்பட்டது.

சபையின் 102 ஆவது அமர்வாகவும் மாகாண சபையின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்யும் சிறப்பு அமர்வின் இரண்டாவது அமர்வாகவும் கைதடியிலுள்ள மாகாண சபை சபா மண்டபத்தில் சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று வியாழக்கிழமை இது நடைபெற்றது.

சபையின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடபில் முன்னைய அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா முன் வைத்த குற்றச்சாட்டுக்கள் மற்றும் கேள்விகளுக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பதில் வழங்கினார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவின் குற்றச்சாட்டுக்களை மறுதலித்துப் பேசிய முதல்வர், அவரைக் கடுமையாகவும் சாடவும் செய்தார்.

அவர் தமது உரையின் ஆரம்பத்தில் பின்வருமாறு கூறினார் :–

“கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அண்மைக்காலங்களில் தன்னைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு எம்மைக் கையாலாகாதவர்கள் என்று சித்திரிக்கப் பார்க்கின்றார்.

“தனது கட்சியில் வேண்டப்படாத ஒருவராக இருக்கும் அவர் பத்திரிகைகளில் தஞ்சம் புகுந்திருப்பது விளங்கக்கூடிய தொன்றுதான். எமது கௌரவ அவைத் தலைவரின் சாதுரியத்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தக்க வைத்துக்கொண்டிருக்கும் அவர் கடந்த 45 மாதங்களில் நாங்கள் எதுவுமே செய்ய வில்லை என்று கூறியுள்ளார்.

“ஒருவேளை அவர், அரசியலை விட்டு ஆத்மீகத்தினுள் நுழைந்துவிட்டாரோ என்று அப்பொழுது நினைத்துக்கொண்டேன். ஆத்மீகத்தில்தான் நாம் எதுவுமே செய்யவில்லை, இறைவன்தான் செய்விக்கின்றான் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. ஆனால் அவரின் கேள்விகள் அந்த அர்த்தத்தில் எழுப்பப்படவில்லை என்று தெரிந்து கொண்டேன்.

“அதாவது நாங்கள் சனி, ஞாயிறு பார்க்காமல் ஒவ்வொரு நாளும் 15 இலிருந்து 18 மணித்தியாலம் வரை ஓயாது வேலை செய்து கொண்டிருக்கின்றோம். பலவற்றைச் செய்துமுள்ளோம். ஆனால் அவை தனது எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பது தான் அவரின் பிரச்சினை. அதனால்தான் நாங்கள் ஒன்றுமே செய்ய வில்லை என்று கூறியுள்ளார். நாங்கள் பலவற்றையும் செய்துள்ளோம். ஆனால் அவருக்கு அவற்றின் தாற்பரியமும் உண்மையும் தெரியாமல் செய்ததால் நாங்கள் ஒன்றுமே செய்ய வில்லையென்பது அவரின் முறைப்பாடு. அவருக்குத் தெரியாமல் நடந்த பலவற்றின் உண்மை நிலையை நான் இங்கு எடுத்து உரைப்பதற்கு முன்னர் என் நண்பருக்கு ஒன்று கூறவிரும்புகின்றேன்.

“உங்கள் எதிர்பார்ப்புக்கள், உங்கள் சிந்தனைகள், உங்கள் ஊகங்கள் யாவும் உங்களின் அறிவின் வரையறைகள், உங்களின் வாழ்க்கையின் பாதிப்புக்கள், உங்கள் கட்சியின் கொள்கைகள் பாற்பட்டவை.

“நாம் எதை, ஏன், எவ்வாறு செய்கின்றோம் என்பதை எம்முடன் கலந்தாலோசித்தே நீங்கள் அறிய வேண்டும். நீங்களாக உங்கள் முடிவுகளுக்கு வந்து பாப்பாண்டவரின் பகர்வுகள் போல் பலதையும் பத்திரிகைகள் ஊடாகப் பலரறியப் பகிர்ந்து கொள்வது நல்லதல்ல என்று கூறி வைக்க விரும்புகின்றேன்.

பத்திரிகையில் பெயர் வர வேண்டும் என்பது தான் உங்களின் குறிக்கோளாக உள்ளதே ஒழிய உண்மையைத் தெரிந்து கொள்வதல்ல என்று நம்புகின்றேன். ஒருவேளை உங்கள் கட்சி உங்களை அடுத்த தேர்தலுக்கு முன் கட்சியில் இருந்து துரத்தி விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் பல கட்சித் தலைமைகளுக்கும் உங்களை விளம்பரப்படுத்த இந்த ஏற்பாடோ நான் அறியேன். எனினும் நீங்கள் எழுப்பிய ஒவ்வொரு விடயத்திற்கும் நான் முதலில் பதில் கூறுவேன்.” – என்று கூறிப் பதிலை வழங்கத் தொடங்கினார்.

இச்சமயத்தில் எழுந்த தவராசா முதல்வரின் கருத்துக்களை மறுதலித்தார்.

“முதலமைச்சர் என்னைக் குறித்தும், எமது கட்சியைக் குறித்தும் பல கருத்துக்களை முன் வைத்துள்ளார். அவருக்கு எனது கட்சியைப் பற்றிக் கதைப்பதற்கு உரிமையில்லை.

“முதலில் முதல்வர் தாம் தற்போது எந்தக் கட்சியில் இருக்கின்றார் என்பதைக் கூறட்டும்.” – என்றார்.

இந்தக் கருத்தினால் சபையில் தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

எனினும், முதல்வர் தாம் எழுதி எடுத்து வந்திருந்த நீண்ட விளக்கத்தை எந்தக் குறுக்கீட்டுக்கும் பதிலளிக்காமல் வாசித்துத்தள்ளினார்.

நண்பகலுக்கு முன்னர் அவரது பதிலுரை முடிவடைந்தது.

தொடர்ந்து நேற்று மாலை வரை உறுப்பினர்கள் பலரும் தொடர்ந்து தமது கருத்துக்களை முன் வைத்தனர். (உ)

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 25 ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் பிரயோக கணிதம் மற்றும் முகாமைத்துவ பீடங்களாக நடத்திச் செல்லப்பட்ட வவுனியா வளாகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று பம்பைமடுவில் உள்ள வளாகத்தில் இடம் பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இதனைப் பல்கலைக்கழகமாக மாற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்று கொண்டு வரப்பட்டது. இது தொடர்பில் அவதானம் செலுத்தி அமைச்சரவையின் அனுமதியின் கீழ் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னி பல்கலைக்கழகமாக மிக விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதனைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் பெற்றுள்ளோம். தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விடயத்தை அனுப்பி வைத்துள்ளோம். பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்களைக் கட்டும் நடவடிக்கையும் இறுதித் தருவாயில் இருக்கின்றது. வன்னி பல்கலைக்கழகத்தை அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைப்போம். – என்றார்.

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

காலைக்கதிர் Kalaikkathir



# காணிகளை மீட்க முடியாமைக்காக ரிஷாத் பதவி துறக்க வேண்டும்!

**வடமாகாணசபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஒக. 18

மாவில்லபேணல்காடுகளாக அறிவிக்கப்பட்டிருக்கும்முசலி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட முஸ்லிம் மக்களின் காணிகளை மீட்பதற்கு முஸ்லிம் தலைவர்கள் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோர் தலையிடுகின்றமைக்கு அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தடையாக உள்ளார் என வடமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தெரிவித்துள்ளார்.

மேற்படி காணிகளை மீட்க முடியாமைக்காக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பதவி துறக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

வடமாகாண சபையின் 102 ஆம் அமர்வு நேற்று பேரவை செயலக சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.





இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாவில்லபேணல்காடுகளாக மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் மடு பிரதேச செயலக பகுதிகளில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மாகாணசபையில் 2 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்துள்ளார்.

அந்தக் குழு விசாரணைகளை நடத்தி எதிர்வரும் 20 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. ஆனால், இந்த விசாரணைக் குழு மக்களின் கருத்துக்களைப்பெறவில்லை.

அத்துடன், மாகாணசபை இந்த விடயத்தில் தலையிடவில்லை. இதற்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் தான் காரணம்.

குறிப்பாக, இந்த விடயத்தைத் தானே செய்யவேண்டும் என்பதால், மற்றைய முஸ்லிம் தலைவர்களையும்வடமாகாண சபை மற்றும் முதலமைச்சரையும் தலையிட விடாமல் அவர் தடுக்கிறார். ஆனால், அங்கே காணி அபகரிப்பால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

எனவே, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தன் பதவியைத் துறக்க வேண்டும் அல்லது அந்த காணிகள் பறிபோனமைக்கு அமைச்சர் பொறுப்பாளியாக வேண்டும் என வடமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் குறிப்பிட்டுள்ளார்.



## நல்லூருக்கு முதியோர் சுற்றுலா!

நல்லூர் கோயில் திருவிழாவை முன்னிட்டு வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் 50முதியவர்கள்வவுனியாவில் இருந்து ஒரு நாள் ஆன்மீகச் சுற்றுலாவாக நல்லூர் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவில் கூமாங்குளம் முதியோர் சங்கத்தின் சார்பில் 20 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் இணைய விரும்பும் தனிப்பட்ட 60 வயது கடந்த முதியோர் மற்றும் சங்கங்கள்தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மத்தியஸ்தர் சபை அமர்வு ஒத்திவைப்பு

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் நல்லூர் மத்தியஸ்தர் சபை அமர்வு நல்லூர் முருகன் ஆலயத் தேர்த்திருவிழா காரணமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது.

இந்தத் தினத்துக்குப் பதிலாக நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை அமர்வு இடம்பெறுமென மத்தியஸ்த சபைத்தவிசாளர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

## சுத்திகரித்த நீர் வழங்கும் திட்டம் தென்மராட்சியில் ஆரம்ப நிகழ்வு!





தேசிய சமூக நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவு மக்களுக்கான சுத்திகரித்த நீர் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்தத்திட்டத்தினைத்தமிழரசு கட்சியின்தென்மராட்சிஅமைப்பாளர் க.அருந்தவபாலன் ஆரம்பித்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நாளாந்தம் 10 ஆயிரம் லீற்றர் நீர் சுத்திகரித்து வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு பிரதான வீதியின் அருகில் காணி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கலந்துரையாடல்

குருநகர்,ஒக.18

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு றெக்கிளமேசன் சன சமூக நிலையத்தின் தலைவர் ம.இம்மானுவேல் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சனசமூகநிலைய அங்கத்தவர்கள் நிர்வாகிகள் மற்றும் பொது மக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரம்; நேற்று அடிக்கல் நாட்டினார் ஜனாதிபதி !





கொழும்பு, ஒக. 18

கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கான அடிக்கல் நடும்நிகழ்வு கொழும்பு கரதியான திண்மக்கழிவு நிலையத்தில் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

மறுமலர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்துக்கு அமைய மேல் மாகாண கழிவு மேலாண்மை ஆணையகத்தால் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான பொது கழிவு மேலாண்மைத் திட்டம் நிறுவப்படவுள்ளது.


அதற்கமைய மாகாண சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் தனியார் நிறுவனம் ஒன்றால் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

கரதியான கழிவு மேலாண்மைக்கமைய நாள் ஒன்றுக்குச் சேரும் கழிவு மிகப்பெரிய அளவாகும். அந்த கழிவுத் திட்டத்தில் 500 மெற்றிக் தொன் அளவு மின்சக்திக்கு மாற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 37 ஆயிரத்து 500 வீடுகளுக்கு போதுமானதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரத்துக்கு மேலதிகமாக ஆர்கானிக் உரம் தயாரிக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க,ரஞ்ஜித்சியம்பலாபிட்டிய, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப் பிரிய உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (க)




### பொய்யான குற்றச்சாட்டுக்களை அடுக்கி

# சிறப்பாகச் சேவையாற்றிய ஐங்கரநேசனை வீட்டுக்கு அனுப்பியமைதான் ஒரேசாதனை!

## வடக்கு மாகாண சபையின் சிங்கள உறுப்பினர் தர்மபால வேதனை

அமைச்சர் ஐங்கரநேசன் மக்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் அறிந்து செயற்பட்ட அமைச்சர். வினைத்திறன் கொண்ட ஐங்கரநேசன் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவருடைய அமைச்சர்பதவியைப்பறித்ததுதான் கடந்த மூன்றரை ஆண்டுகளில் வடக்கு மாகாண சபை செய்த ஒரே சாதனையாக உள்ளதுஎன்றுமாகாண சபையின் சிங்கள உறுப்பினர்தர்மபாலசெனிவிரட்ன தனதுஆதங்கத்தைநேற்று வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்தமூன்றரைஆண்டுகளில் வடக்கு மாகாண சபையில் நடைபெற்ற செயற்பாடுகள்தொடர்பான மீளாய்வுச் சிறப்பமர்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அமர்வில்உரையாற்றியபோதே வவுனியா தெற்கை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர் தர்மபால செனிவிரத்தின இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

அமைச்சர் ஐங்கரநேசன் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை. தமிழ், சிங்களம் என்ற பேதம் பார்ப்பதில்லை. ஆளுங்கட்சிஉறுப்பினர்களுக்குச் செய்கின்ற அத்தனைஉதவிகளையும் சிங்கள உறுப்பினர்களாகிய எங்களுக்கும் அவர் செய்துள்ளார். என்னுடைய பிரதேசங்களுக்கு என் மூலம் கால்நடைகளை வழங்கியுள்ளார். மரநடுகை மாதத்தின்போது 2ஆயிரம் மரக்கன்றுகளைஎன்னிடம் தந்து மக்களிடம் கொடுக்க வைத்தார். இன்று அவை வளர்ந்து நிற்கின்றன.

கடந்தமூன்றரைஆண்டுகளில் என்னுடைய அவதானிப்பில் அமைச்சர்களில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டவர் அவர். அப்படிப்பட்ட ஒருவரை ஆளுங்கட்சியில் உள்ளவர்களே பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அமைச்சர் பதவியில் இருந்து அவரை விலக வைத்துள்ளனர். கடைசியில் எல்லா அமைச்சர்களுக்கும் இப்போது பிரச்சினை ஆகிவிட்டது. ஆளும்கட்சிஉறுப்பினர்கள் தங்களுக்கிடையே இவ்வாறானசெயல்களில் இனிமேல் ஈடுபடாது மிச்சமாயிருக்கிற ஒருவருட காலத்திலாவது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய முன்வரவேண்டும். – எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## யாழ். பேருந்து நிலையத்தில் தேங்கிக் கிடக்கும் குப்பைகள்








யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள பேருந்துத் தரிப்பிடத்தின் ஓரமாக போக்குவரத்துச்சபைபேருந்துகள் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில், கழிவுகள் நீண்டநாள்களாகஅகற்றப்படமால் மூடை மூடையாகக் காணப்படுகின்றன.

தற்போதுமழைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில், சிலநாள்களிற்குமுன்னர் பெய்த மழையின் நிமித்தம், மேற்படி மூடைக் கழிவுகளில் இருந்து துர்நாற்றம் பரவுவதோடு, நோய்காவிகளின் பெருக்கத்திற்கும் அது வழி சமைத்துள்ளது.

இதனால், யாழ்.நகரிற்கு வரும் பயணிகள் மற்றும் சாலைஊழியர்கள் அனைவரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றார், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உடன் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டுமென அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

# முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் தவறான தரவுகளை வழங்குகின்றது

## அதனால் மக்களுக்குப் பாதிப்பு; ரவிகரன் சுட்டிக்காட்டு

*(எஸ்.நிதர்ஷன்)*

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் தவறான தரவுகளை வெளிப்படுத்துவதால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன என அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று இடம்பெற்றபோது கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தின் தகவல்களின் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 60தமிழ்க்குடும்பங்களுக்கு காணிகள் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. அதே போன்று, அந்த மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 07 முஸ்லிம் குடும்பங்களுக்கும் 170 சிங் களக் குடும்பங்களுக்கும் காணிகள் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், வாக்காளர் பட்டிய லின் தகவல்களின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 சிங்களக் குடும்பங்கள் மட்டுமே வசிக்கின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டச்செயலகத்தின் தகவலின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 14 ஆயிரத்து 162 ஏக்கர் காணிகள் படையினர் வசம் உள்ளன எக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் முறிகண்டி பகுதியில் மாத்திரம் படையினரின் குடியிருப்புக்காக சுமார் ஆயிரத்து 703 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப் பட்டிருக்கின்றது.

அதேபோல் கொக்குத்தொடுவாய் செல்லும் வீதியில் ஆழ ஊடுருவும் படையணி சுமார் 170 ஏக்கர் நிலத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது எனவும் ரவிகரன் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தின்தவறான தகவல்கள் காரணமாக தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்படுவர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)




## காணாமற் போனோரின் உறவுகளுடன் ஐ.நா. பிரதிநிதிகள் கிளிநொச்சியில் சந்திப்பு

ஜெனிவாலிருந்து வருகை தந்துள்ள ஐ.நா. மனிதஉரிமைகள்ஆணையாளர் பணியகத்தின் பிரதிநிதியான தோமஸ் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. அகதிகள் தூதரகப் பிரதிநிதிஆகியோர்இங்குகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைகிளிநொச்சியில்நேற்றுசந்தித்துகலந்துரையாடினர்.

179நாளாககிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனவீர்ப்பு போராட்டத்தில்ஈடுபட்டுவரும்காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஐ.நா. அதிகாரிகள் நேற்று பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நிலைமைகளை கேட்டறிந்து கொண்டமையோடு, இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

# பொலனறுவைக்கு வந்த வெள்ளை மான்



பொலனறுவை – மெதிரிகிரிய யொதகனாவ எனும் பகுதியில் அரிய வகை மானொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பால்போன்றவெள்ளை நிறத்தில்காணப்படும் இந்த மான், காண்பதற்கு மிகவும் அரிதானது. இலட்சங்களில் ஒன்றே இவ்வாறான அமைப்பில் பிறக்குமென தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் வாழ்பவர்களால் நேற்றைய தினம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மானை ஊர் மக்கள் திரண்டு ஆச்சரியத்துடன் பார்த்து வந்துள்ளனர்.

தற்போது மிஹிந்தலை மிருகக் காட்சி சாலைக்கு இந்த மான் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.